Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :234 ஆடி 05 ஆம் நாள் திங்கட்கிழமை 20 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## சங்கிலியை திருடியவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 20
மாவிட்டபுரம் ஆலய தேர்த் திருவிழாவுக்கு நேற்று வருகைதந்த பக்தர் ஒருவரிடமிருந்து ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலியை அறுத்த, 27

## சலுகைகளை வழங்கி சமாளிக்கவே முடியாது!

*தமிழர் உரிமைகளே வேண்டும் என்கிறார் சம்பந்தன்*




யாழ்ப்பாணம், ஜூலை 20
சலுகைகளை வழங்கி சம்பந்தனைச் சமாளிக்கலாம் என்று மஹிந்த ராஜபக்சவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவோ நினைக்கக்கூடாது. சலுகைகளை வழங்கி சம்பந்தனை ஒருபோதும் சமாளிக்க முடியாது. சம்பந்தனைச் சமாளிப்பதற்காக இருந்தால் சம்பந்தனுடைய மக்க 27

## தமிழர்கள் தனிநாடு கோரினால்

# வடக்கு, கிழக்கில் இரத்த ஆறு ஓடும்

## தேரர்கள் கொந்தளிப்பு



கொழும்பு, ஜூலை 20
சமஷ்டி என்றால் அது பிரிவினை. தனிநாடுதான். தமிழர்கள் அதை மீண்டும் கோரினால், வடக்கு. கிழக்கில் இரத்த ஆறு தான் ஓடும். அரசு வழங்கும் தீர்வை ஏற்றுக்கொண்டு தமிழர்கள் பேசாமல் அமைதியாக இருக்கவேண்டும். 27

## பிரபாகரன் ஆயுதத்தால் கேட்டதை பேனாவால் எழுதிக் கொடுக்கமாட்டோம்

*சிங்கள மக்கள் மத்தியில் மஹிந்த முழக்கம்*

கொழும்பு, ஜூலை 20
பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்த நாட்டை பேனாவால் எழுதிக்கொடுக்க நாங்கள் தயார் இல்லை என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். வெல்லவாய, செவனகல, தன்தும சந்தியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு 26



## மஹிந்தவின் கூட்டத்தில் நேற்று அமளிதுமளி

கொழும்பு, ஜூலை 20
சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று பங்கேற்றிருந்த கூட்டத் 27

### ரிசாத் பதியுதீனுக்கு

## தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்பை மீறி அழைப்பு

கொழும்பு, ஜூலை 20
முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீனை மீண்டும் இன்று காலை 9.30 மணிக்கு விசாரணைக்கு முன்னிலையாகுமாறு குற்றப் 27

## தீர்வை வழங்காத அமைச்சர் டக்ளஸ்

### போராட்டத்தில் குதித்தனர் மீனவர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20
வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்வரும் ஒரு வாரத்துக்கு கடற்றொழிலுக்குச் செல்லாது பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.
கடலட்டை பிடிப்பு, டைனமெற் பயன்படுத்தி மீன்பிடித்தல், சுருக்குவலை, உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி கரைவலை தொழில் செய்தல் ஆகியவற்றைத் தடுக்க வலியுறுத்தியே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழை காலை 6:30 மணி வரை மீனவர்கள் இந்தப் போராட் 27

## மாணவி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20
ஆறுகால்மடம் பகுதியில் மாணவி ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். ஜெதீபன் சிவப்பிரியா (வயது - 19) 27

## மின்சாரம் தாக்கி 11 மாதக் குழந்தை

### பரிதாபச் சாவு!!!

யாழ்ப்பாணம், ஜூலை 20
அனலைதீவு 4ஆம் வட்டாரப்பகுதியில் மின்சாரம் தாக்கி 11 மாத பெண்குழந்தை நேற்றுக் காலை உயிரிழந்த சம்பவம் அந்தப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. தயாளன் 27

## யானை தாக்கியதில் விரிவுரையாளர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 20
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பபீடத்தில் கல்வி பயிற்று 27


## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்


கிளிநொச்சி, ஜூலை 20
மல்லாவி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அனிச்சையன் குளப் பகுதியில் நேற்று அதி 27

## ரயில் மோதி ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 20
கிளிநொச்சி மாவட்டத்தின் கனகபுரம் ரயில் கடவையில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில், இராசையா இரா 27

## இராணுவக் குடியிருப்பில் உள்ளோருக்கான குளம் மற்றும் நடைபாதை





## மிருசுவிலில் திறக்கப்பட்ட இராணுவத்தினரின் கூடைப்பந்தாட்ட திடல்




## இராணுவத்தினரின் யோக்கட் தொழிற்சாலை




யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பலாலியில் இராணுவத்தினரின் யோக்கட் தொழிற்சாலை, இராணுவத்தினருக்கான உடற்பயிற்சிக் கூடம், இராணுவக் குடியிருப்புக்கான குளம், இராணுவத்தினருக்கான நடைபாதை என்பவற்றைத் திறந்து வைத்தார். உடற்பயிற்சிகூடமானது 110 அடி நீளமும், 60 அடி அகலம் மற்றும் 35 அடி உயரத்தையும் கொண்டுள்ளதுடன் பெட்மின்டன் கூடமும் இதனுள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உடற்பயிற்சிகூடமானது 6.5 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## இராணுவத்தினருக்கான உடற்பயிற்சிக் கூடம்.




## மல்லாகம் நீதிவான் முகாமின் நேற்றைய தோற்றம்.





பலாலியில் இராணுவத்தினர் காணியை ஆக்கிரமித்துள்ளமையால் அங்கிருந்து இடம்பெயர்ந்து, 30 ஆண்டுகளாக அகதிகளாக மல்லாகம் நீதிவான் முகாம் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள்.

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



## நாடாளுமன்றத் தேர்தல் - 2020



**எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**

நான் உங்கள் வாக்குகளை எனக்குத் தருமாறு கேட்பதற்கான காரணத்தை உங்கள் முன் அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

நான் ஒரு பிரபல தொழிலதிபராக இருந்து இன்று உங்கள் முன் நான் அரசியல்வாதியாக அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்த் தேசத்தின் உண்மையை நாடாளுமன்றத்துக்கும் எங்களுடைய தேசத்தின் மக்களுக்கும் உலகத்திற்கும் உண்மையை எடுத்துரைப்பதற்காக உங்களிடம் உங்கள் வாக்குகளை எனக்கு ஒரு தடைவ தாருங்கள் என்று அன்பாகவும் பணிவாகவும் கேட்டு நிற்கின்றேன்.

1. கடந்த 20 ஆண்டுகால அரசியலில் தமிழ்த் தேசிய மக்களாகிய நாங்கள் போட்ட வாக்குகளால் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்களை இழந்து நிற்கின்றோம் என்பதையும் பல்லாயிரம் கோடிரூபாய் பெறுமதியான எங்கள் சொத்துக்களையும் இழந்து தவிக்கின்றோம் என்பதனையும் உங்களிடம் நான் நினைவு படுத்துகின்றேன்.

2. இன்று உங்களிடம் வாக்குகளை கேட்பவர்கள் அனைவரும் 10 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரை நாடாளுமன்றத்துக்குச் சென்றவர்கள் என்றும் அவர்கள் செய்த நடிப்புக்களை நீங்கள் அறியாதவர்களாகவும் புரியாதவர்களாகவும் ஏன் இன்னும் மௌனிகளாக இருக்கின்றீர்கள் என்பதை நீங்கள் பல தடவைகள் உங்களையே நீங்கள் கேட்டுக்கொள்ளுமாறும் வேண்டிக்கொள்கின்றேன்.

3. நீங்கள் 2020 ஆம் ஆண்டு தேர்தலுக்கு அளிக்கும் வாக்குகள் ஆக்கபூர்வமானதும் தமிழ் தேசத்தின் அபிவிருத்திக்கும் பல்லாயிரம் கோடிரூபாய்களை கொண்டு வரவேண்டிய தேவையும் சம உரிமை கொள்கைக்கு நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன் என்றும், தமிழ் தேசத்தின் நன்மைக்கே உங்கள் வாக்குகளை அளியுங்கள்.

## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

✋ X 5

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க.**

**"உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!"**

**முள்ளிவாய்க்கால் உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....**





முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 73வது நினைவு தினம் வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத் தப்பட்டது. நிகழ்வில் சமூக ஆர்வலர்களான விக்னா, சிவசேனை அமைப்பின் முக்கியஸ்தர் தமிழ்த்திரு மாதவன், வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் ப. லம்போதரன் மற்றும் சுந்தரராயன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ரி3-110)

# ராஜபக்சக்கள் ஆட்சியிலேயே இந்த நிலையா?

## வெதும்புகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஜூலை 20

பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டுமாயின் குருநாகல் மரபுரிமையை உடைத்தவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது என்று நாம் நம்பினோம். எனினும் ராஜபக்சாக்களது பெருமையையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி அவர்களுக்கு கீழ் உள்ளவர்களே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளர் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

உடைக்கப்பட்டுள்ள புவனேகபாகு மன்னனுடைய அரசசபையை பார்வையிடுவதற்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை அங்கு சென்ற அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:

சிகிரியாவுக்கு வருகை தந்த தமிழ் இளைஞரொருவர் அங்குள்ள சுவரில் கிறுக்கியதற்காக கைது செய்யப்பட்டார். அதனைஅண்மித்தவிகாரையொன்றில் வேறு இளைஞர்கள் சிலர் முறைதவறி தவறான புகைப்படம் எடுத்தமைக்காக அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இத்தனை வரலாற்று சிறப்பும் முக்கியத்துமும் மிக்க இந்த கட்டடம் உடைக்கப்பட்டமைக்கு எதிராக எங்கு சட்டம் நடைமுறைப்பட்டுள்ளது ? பலமற்ற பொது மக்களுக்கு மாத்திரம் தான் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றதா ?

ஆட்சியாளர்களுக்கும் அவர்களது சேவையாளர்களும் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட தேவையில்லையா ? ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் அவரது வேலைத்திட்டத்தை இதில் காண்பிக்குமாறு கோருகின்றோம். கிழக்கிலும் இது போன்று தொல்பொருள் முக்கியத்துவமுடைய இடங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. பெரும்பாலான சிங்கள பௌத்தர்கள் வாழும் இந்த பிரதேசத்திலும் இவ்வாறு நடைபெறுகிறது என்றால் நாட்டின் நிலைமை என்ன ? குருணாகல் மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நீதியை நிலைநாட்ட வேண்டும். ஒரு சதமேனும் மக்களின் வரிப்பணத்தில் இல்லாமல் இதனை தகர்த்தவர்களது சொந்த செலவில் இந்த கட்டம் புனரமைக்கப்பட வேண்டும், என்றார். (ஒ,5)

# மூன்றாவது தடவையும் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 20

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய புண்ணாலைக்கட்டுவன் வடக்கு பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவருக்கு 25 வயது என்று தெரிவிக்கப்பட்டது. இவரின் வீட்டை பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்ட போது வீட்டில் இருந்து 25 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. கைதான சந்தேக நபரான பூசாரி மேலதி சட்ட நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் இதற்கு முன்னரும் இரண்டு தடவை கைதாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,25)

# இந்தியாவுக்கு சட்டவிரோதமாக சென்று வந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 20

சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு சென்று வந்தவர் அக்கரை கடற்பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த சம்வம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. நாகர்கோயில் கிழக்கைச் சேர்ந்தவரும் தற்போது வளலாய் பகுதியில் வசித்து வருபவருமான 34 வயதுடைய நபரே இந்தியாவுக்குச் சென்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சென்றவர் நேற்றுக் கரை திரும்பிய நிலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் சட்டவிரோத செயற்பாட்டிற்காக இந்தியா சென்று வந்துள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபருக்கு எதிராக சட்டவிரோதமான முறையில் வெளிநாடு சென்று வந்தமை தொடர்பிலான சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரணை செய்த நீதிவான் அவரை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ,5,25)

# குடும்பப் பெண் மீது வாள்வெட்டுத் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கடந்த வெள்ளிக்கிழமை துணைவிப் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பப் பெண்ணொருவர் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயம் அடைந்துள்ளார். அந்த இடத்தில் தற்காலிகமாக வசிக்கும் தனேஸ்குமார் ஜனனி என்ற மூன்று பிள்ளைகளின் தாயே வாள்வீச்சுக்கு இலக்காகியுள்ளார்.

பக்கத்து வீட்டை சேர்ந்த ஒருவரே வாள் வீச்சை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபர் முன்னர் ஒரு பெண்ணைத் தாக்கியமை தொடர்பான வழக்கு நீதிமன்றில் நடைபெற்றுவருகின்றது. அந்தச் சம்பவத்தை நேரடியாகக் கண்ட ஜனனி, நீதிமன்றத்தில் சாட்சி செல்ல வேண்டாம் என்று அந்த நபர் மிரட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பெண்ணின் 15 வயது மகனும் அவரது நண்பரும் வீட்டில் இருந்தவேளை போதையில் வந்த அந்த நபர் மகனை இழுத்துச் சென்று தனது வீட்டின் முன்னால் உள்ள மரத்தோடு கட்டி வைத்துத் தாக்கினார். அதையறிந்த தாயார் அந்த இடத்துக்கு வந்து ஏன் எனது மகனைத் தாக்குகின்றீர்கள் எனக் கேட்டபோது அவரையும் சரமாரியாகத் தாக்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தநேரம் கட்டப்பட்டிருந்த மகனை வேறொருவர் அவிழ்த்து விட்டபோது அருகில் இருந்த கட்டை ஒன்றால் அவரைத் தாக்கியுள்ளார். அதையடுத்து வீட்டின் உள்ளே சென்ற நபர் வாளை எடுத்து வந்து அந்தப் பெண்ணைத் தாக்கியுள்ளார்.

படுகாயமடைந்த பெண்ணை அயலவர்கள் ஆட்டோவில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பொலிஸார் அவரை அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# சகல செயற்பாடுகளிலிருந்தும் ஒதுங்கும் சுகாதார பரிசோதகர்கள்

கொழும்பு, ஜூலை 20

தொற்றுநோய் மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு உள்ள அதிகாரங்கள் வழங்கப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும். அத்தோடு சகலவிதமான தொற்று நோய் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்தும் விலகியு ள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் உப தலைவர் தெரிவித்தார்.

தேவையற்ற நேரடி அதிகாரங்களையே பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கோருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளமை குறித்து கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொற்றுநோய் மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்கனவே பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கடந்த மார்ச் மாதம் முதல் சுகாதார அமைச்சால் இல்லாமலாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீக்கப்பட்டுள்ள அதிகாரங்களையே நாம் கோருகின்றோம். ஆனால் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்களை நாம் கோருவதாக திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

தொற்றுநோய் மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச்சட்டத்தின் எவ்வித அதிகாரங்களையும் வழங்காமல் எம்மால் அவை தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கைகள் இடம்பெறும் போது அவற்றுக்கு எதிராக எம்மால் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியாது. எனவே தான் சகலவிதமான தொற்று நோய் கட்டுப்படுத்தல் சேவைகளிலிருந்தும் விலகுவதற்கு தீர்மானித்துள்ளோம்.


இவை மாத்திரமின்றி டெங்கு கட்டுப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்தும் விலகுவதற்கும் தீர்மானித்துள்ளோம். தொற்றுநோய் மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச்சட்டத்தின் கீழ் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்படும் வரை எமது தொழிற்சங்க நடவடிக்கை தொடரும். சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் அதன் செயலர், பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவரை அமைச்சிற்கு அழைத்து சில விடயங்களைச் செய்து தருவதாக கூறியிருக்கின்றனர். எனினும் அவை உறுதிப்படுத்தப்படும் வரை எமது தீர்மானத்திலிருந்து நாம் விலகப் போவதில்லை, என்றார். *(தொடர்புடைய செய்தி 12ஆம் பக்கத்தில்)* (ஒ,5)

## பதிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
தென்மராட்சி தெற்கு கைதடி நாவற்குழி கமக்காரர் அமைப்புக்கு உட்பட்ட அங்கத்தவர்களுக்கு இந்த வருட கால போக நெற்செய்கைக்கான உரமானியப் பதிவுகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாக, கமக்கார அமைப்பின் தலைவர் ஐ.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.
நாவற்குழியிலுள்ள ஓய்வுபெற்ற கிராம அலுவலர் சபாநாதன் வீட்டில் பதிவுகள் இடம்பெறும். பதிவு செய்யவருவோர் தமது தேசிய அடையாள அட்டை, இந்த ஆண்டுக்கான ஏக்கர் வரி, சந்தா என்பவற்றைச் செலுத்திய பற்றுச் சீட்டுக்களுடன் பதிவை மேற்கொள்ளவருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

# நாட்டை துண்டாடும் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை தூக்கி எறியுங்கள்

### குணதாச அமரசேகர கோபாவேசம்



**கொழும்பு, ஜூலை 20**
**போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பின்றி ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ் மக்களுக்கு விசேடமாக எதனையும் வழங்க வேண்டியதில்லை என்பதால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அரசு முழுமையாக நிராகரிக்க வேண்டும்.**

இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பயணம் துளியும் மாறவில்லை. நாட்டைக் கூறுபோடும் விதத்திலான தீர்வையே கோருகின்றனர். அதற்கேற்ற வகையிலேயே தேர்தல் அறிக்கைகள் வெளியிடப்பட்டுவருகின்றன.
இந்த முறை வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பிரிவினைவாத சிந்தனைகளே உள்ளடக்கப்பட்டுள்ளன. அதை அரசு நிராகரிக்கவேண்டும். அவ்வாறு இல்லாது ஏற்கும்பட்சத்தில் ராஜபக்சக்களுக்கு ஆட்சியை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.
உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜனாதிபதியொருவர் தமிழ் பேசும் மக்களின் ஆதரவு இன்றி வெற்றிபெறலாம் என்பதும் கடந்த ஜனாதிபதித் தேர்தல்மூலம் உறுதியானது. ஆகவே, தமிழர்களுக்கு விசேடமாக எதனையும் வழங்கவேண்டியதில்லை, என்றார். (ஓ,எ,44)

# சட்டவிரோத சொத்துக்களை பறிப்பதற்கு தனியான பிரிவு

கொழும்பு, ஜூலை 20
சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் உடைமைகள் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய விசேட விசாரணைப் பிரிவு அமைக்கப்படவுள்ளது.
சட்டத்துக்குப் புறம்பான சொத்துக்கள் மற்றும் அறிவுசார் சொத்து விசாரணைப் பிரிவு என்ற புதிய பொலிஸ் பிரிவை நிறுவ பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.
அதற்கான வர்த்தமானி விரைவில் வெளியாகும் என்றும், போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களின் சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பாக இந்த விசேட பிரிவு விரிவாக ஆராயவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்தப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாக, பயங்கரவாத அமைப்புகளுக்குச் சொந்தமான சொத்துக்களை அடையாளம் கண்டு பறிமுதல் செய்வது, பணமோசடி மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றிலிருந்து சம்பாதித்த பணம் மற்றும் அவற்றால் கிடைத்த சொத்துக்களைப் பறிமுதல் செய்வது என்பவையாகும்.
குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் இந்த புதிய பொலிஸ் பிரிவு அமைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,எ)




# உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரிகள் மைத்திரிபாலவும் மஹிந்தவுமே

## சவேந்திர சில்வாவுக்கு சி.ஐ.டி. அறிக்கையை ரணில் காண்பித்ததாக ஹரின் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 20**

**கடந்த வருட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஹெலிக்கொப்டர் மூலம் அலரிமாளிகைக்கு வந்தார். இதன் போது அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த பொலிஸாரின் அறிக்கையைக் காண்பித்து அதில் முதலாவது இடத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரும் இரண்டாவதாக தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைச் செயற்பாட்டாளர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொழும்பில் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முஸ்லிம் நபர்களை ஈடுபடுத்தியிருந்தாலும் அது ஆளும் தரப்பினரின் திட்டம். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரமதாசவை தோல்வியடையச் செய்வதற்காகவே இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

அந்த அறிக்கையை விளையாட்டுத்துறை அமைச்சில் ஊடகவியலாளர் சந்திப்பில் காண்பித்து. இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளை அடையாளப்படுத்துவேன் என்று தெரிவித்தேன். உடனே எனக்கு எதிராக விமர்சனங்கள் பரப்பப்பட்டன. ஊடகங்கள் முன்னிலையில் என்னை வரவிடாமல் செய்தார்கள். இந்த அனைத்து திட்டமும் ஜனாதிபதி தேர்தலை இலக்குவைத்தே இடம்பெற்றிருந்தன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. நாம் அனைவரும் முகங்களை மூடிக்கொண்டுள்ளோம். நாளைய தினம் தொடர்பில் எமக்கு நம்பிக்கை இல்லை. கொழும்பு மூடப்படுமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. முச்சக்கர வண்டிகள் ஓடுமா என்றுகூடத் தெரியவில்லை. ஆளும் தரப்பினருக்கு தேர்தல் பித்துப் பிடித்துள்ளது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரமதாசவால் முன்னெடுக்க முடியாமல்போன வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காகவே சஜித் பிரேமதாச 31 வருடங்களுக்குப் பின்னர் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கியுள்ளார். இதுவரை காலமும் அவர் அம்பாந்தோட்டையிலே போட்டியிட்டிருந்தார்.

கோத்தாபயவுக்கு கிடைத்த வாக்குகளில் 5 வீதம் சஜித்துக்கு கிடைத்திருந்தால் இருவரும் 47 வீதத்தைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள். இரண்டாவது விருப்பு வாக்குகள் கணக்கிடப்பட்டிருக்கும். அது மக்கள் விடுதலை முன்னணியினரது வாக்குகள். அப்படியென்றால் சஜித்தான் வெற்றிபெற்றிருப்பார் - என்றார். (து)

# கீழ்த்தரமான அரசியலில் 'முஸ்லிம் மொட்டுக்கள்'

*முன்னாள் ஆளுநர் அஷாத் சாலி விசனம்*

கொழும்பு, ஜூலை 20

முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை, மலிவான விலைக்கு வாங்கும் அரசியல் கலாசாரத்தை 'முஸ்லிம் மொட்டுக்கள்' ஆரம்பித்துள்ளன என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மேல் மாகாண முன்னாள் ஆளுநருமான அஷாத் சாலி விசனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ராஜபக்சக்களின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட அக்கிரமங்கள், அழிவுகள், அடக்குமுறைகளுக்குப் பரிகாரமாக அரிசி, சட்டி, பானை, தையல் மெஷின்களை வழங்கும் இவர்களின் புதிய போக்குகள், 'ஈமான்' மற்றும் 'கலிமாவை' அடகு வைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளாகக் கொள்ளத்தக்கவை.

முஸ்லிம்களை இவ்வாறு மலினமாக வழி நடத்தி, ராஜபக்சக்களின் விசுவாசிகளாவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இந்த நிலைமையைத் தொடராவிட்டால், மெதமுலனையைத் தொழும் திசையாக மாற்றுவதற்கும் இந்த முஸ்லிம் மொட்டுக்கள் தயங்கப்போவதில்லை. எனவே, இத்தகைய அரசியல் கலாசாரத்தை முஸ்லிம்கள் தோற்கடிப்பது அவசியம்.

ஒரு குடும்பத்தை மாத்திரம், தொடர்ந்தும் ஆட்சியில் அமர்த்துவதற்கு இவர்கள் முயற்சிப்பது, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, தனிநபர் வழிபாட்டுக்கே வழி கோலுவதாக அமையும். அதிகாரமும் சுகபோகமும் தலைக்கேறிய முஸ்லிம் மொட்டுக்களின் போக்குகளால், முஸ்லிம் சமூகம் கொதிப்படைந்துள்ளது- என்றார். (து)

# புதுமுகங்களை இணைக்க முயன்றதே முரண்பாட்டுக்கு வழிவகுத்தது

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய முகங்களை இணைத்துக்கொள்ள முயற்சித்ததாலேயே பலரும் என்னுடன் முரண்பட ஆரம்பித்தனர் எனத் தெரிவித்துள்ள அந்தக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அடுத்த தலைமுறைக்கு கட்சியின் பொறுப்புகளை கையளிக்க இடமளித்தால் மாத்திரமே தன்னால் கட்சியிலிருந்து விலக முடியுமென்றும் தெரிவித்தார்.

பொலனறுவையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பரப்புரைக் கூட்டத்தில் கருத்துவெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்னும் ஐந்து வருடங்கள் இவ்வாறே பயணிப்பதா இல்லை ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். தற்போதைய அரசு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முன்வைத்த திட்டங்கள் தொடர்பாக தற்போது அவர்களில் எவரும் கதைப்பதுகூட இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரம் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தைச் செயற்படுத்த முடியும் - என்றார். (து)

# வேறு கட்சிகள் இந்த நாட்டை படுகுழிக்குள் தள்ளியபோதெல்லாம் நாட்டை மீட்ட பெருமை ஐ.தே.கவுக்கே!

*அதன் தலைவர் ரணில் கூறுகின்றார்*

கொழும்பு, ஜூலை 20

வரலாற்றைப் பொறுத்தவரை எமது நாட்டை வேறு கட்சிகள் படுகுழிக்குள் தள்ளியபோதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டையும், பொருளாதாரத்தையும் மீட்டெடுத்து வந்திருக்கிறது.

அதற்கேற்பவே இந்தமுறையும் எம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி, படுகுழிக்குள் தள்ளப்பட்டிருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான செயற்றிட்டத்தை முன்நிறுத்தியே பொதுத்தேர்தலில் களமிறங்குகின்றேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தல் என்பது ஒரு நாட்டின் அரசைத் தெரிவு செய்வதற்கான தேர்தலாகும். அவ்வாறெனில் அதில் போட்டியிடுகின்ற கட்சிகள் தமது கொள்கைகளைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். எனினும், இந்தமுறை பொதுத்தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனத்தை எமது கட்சி மாத்திரமே இதுவரை வெளியிட்டிருக்கிறது.

அதேவேளை, சுயதேவைப்பூர்த்தியை எட்டிய நாட்டை உருவாக்குவோம் என்று ஆளுந்தரப்பு கூறிவருகின்றது. ஏற்கனவே எமது நாடு பல்வேறு உணவுப்பொருள் உற்பத்திகளிலும் சுயதேவைப்பூர்த்தியடைந்த நாடாகவே இருக்கிறது. ஆனால் அதனால் மாத்திரம் மக்களின் ஏனைய அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கிவிட முடியுமா? எனவேதான் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான திட்டங்களையும் எமது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கியிருக்கும் அதேவேளை, எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் சுமார் 500 மில்லியனால் அதிகரிக்கப்போகும் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளின் சனத்தொகைக்கு உணவை வழங்கக்கூடிய வகையில் தூரநோக்குடனான உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் திட்டமிட்டிருக்கிறோம்.

அதற்கேற்றவாறு உணவு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கான காணிகளைப் பெற்றுக்கொடுத்தல், ஏனைய ஆரம்ப கட்ட வசதிகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கல், நாடுமுழுவதும் பெருமளவான களஞ்சியசாலைகளை நிறுவுதல் போன்றவற்றை பொதுத்தேர்தலின் ஊடாக நாம் ஆட்சியமைக்கும் பட்சத்தில் செய்வதற்கு எதிர்பார்த்திருக்கிறோம். அதுமாத்திரமன்றி அடுத்த வருடத்திலிருந்து நாட்டுக்கு சுற்றுலாப்பயணிகளை வரவழைப்பதற்கான விசேட திட்டமொன்றையும் செயற்படுத்தவிருக்கிறோம் - என்றார். (து)




# தேசிய வளங்களை மீட்கும் போராட்டத்தைக் கைவிடேன்

## கூறுகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச

கொழும்பு, ஜூலை 20

சர்வதேச ஒப்பந்தங்களில் இருந்து விலகுவது எளிமையான காரியமல்ல. தாரைவார்க்கப்பட்டுள்ள தேசிய வளங்களை எதிர்கால சந்ததியினருக்காக மீட்டெடுப்பதற்கான முயற்சியை நான் ஒருபோதும் கைவிடமாட்டேன் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மஹியங்கனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களிலிருந்து விலகுவது எளிதான காரியமல்ல. உரிய வழிமுறைகளை எவ்வித முரண்பாடுகளும் இல்லாதவிதத்தில் முன்னெடுக்க வேண்டும். ஒப்பந்தத்தால் தாரை வார்க்கப்பட்டுள்ள தேசிய வளங்களை மீட்டு அவற்றை எதிர்கால தலைமுறையினருக்கு பொறுப்பாக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கி விவசாயப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் பலமாக முன்னெடுக்கப்படும். எமது நாட்டின் பாரம்பரிய உற்பத்திகளைச் சர்வதேசத்தில் அடையாளப்படுத்த வேண்டுமாயின் தேசிய உற்பத்திகள் முன்னேற்றமடைய வேண்டும்.

கொவிட் 19 வைரஸ் தாக்கத்தை முறையாக வெற்றி கொண்டுள்ளோம். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முப்படையினரை கொவிட்19 வைரஸ் ஒழிப்புக்கும் மக்களின் பாதுகாப்புக்கும் ஈடுபடுத்தினார். இதன் காரணமாகவே குறுகிய காலத்தில் இந்த வெற்றியை எம்மால் பெறமுடிந்தது - என்றார். (து)

# மின்சாரத்துறையால் மிகப்பெரும் சலுகை

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20
மின்சாரத்துறையில் இதுவரை கிடைக்காத சலு கையை அரசாங் கம் மக்களுக்கு வழங்கியிருப்பதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரி வித்துள்ளார்.

அரசாங்கம் மின்சார சபைக்கு வழங்கியஎரிபொருள் நிவாரணம் காரணமாக, பெப்ரவரி மாத பட்டியலுக் கான தொகையே, மார்ச், ஏப்ரல், மே மாதங்களிலும் அறவிடப்படும். இதற் காக அர சாங்கம் மின்சார சபைக்கு எரிபொருள் நிவாரணத்தை வழங்கியுள் ளது. இந்தச் சலுகையானது நாட்டு மக்க ளுக்கு கிடைத்த மிகப்பெரும் சலுகை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி3)

# சிறைச்சாலைகளில் 1102 கைத்தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு, ஜூலை 20
கடந்த மாதத்தில் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை யில், 1102 கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரி வித்துள்ளது. சிறைகளில் குற்றச்செயல்கள் இடம்பெறுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், கடந்த சில வாரங்களாக சிறைச்சாலை களை ஒழுங்க மைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையிலேயே, சிறைச்சாலைகளில் மேற்கொள் ளப்பட்ட தேடுதல் நடவடிக் கையின் போது 1102 கைத்தொலைபேசிகள், 688 சிம் கார்டுகள், 1310 பட்டரிகள் மற்றும் 283 தொலைபேசி சார்ஜர்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வெலிக்கடை, நீர்கொழும்பு, மகர் மற்றும் பூஸா சிறைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)






## அமைச்சுப் பதவி குறித்து பரிசீலிப்பதென்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம்!

### சிவாஜி விளாசல்

மீண்டும் வெள்ளை வான் வரும், கொலைகாரர்கள் என்றெல்லாம் தம்மால் விமர்சிக்கப்பட்ட அதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ ஆகியோருடன் சேர்ந்து அமைச்சப் பதவிகளைப் பெறுவது தொடர்பில் த.தே. கூட்டமைப்பு பரிசீலிப்ப தென்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம்என்று தெரிவித்தார்தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளரான சிவாஜிலிங்கம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளுடைய பங்களிப்போடு தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை. விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சுமந்திரன் தெரிவிக்கின்றார். அதே சுமந்திரனுக்கு வக்காலத்து வாங்கும் சிறிதரன் 2015ஆம் ஆண்டு வவுனியாவில் ஒரு தனியார் விடுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து சரணடைந்த 12 ஆயிரம் புலிகளும் சயனைட் அருந்தி இறந்திருக்க வேண்டும்- என்றார்.

மிலேச்சத்தனமான கருத்துத் தெரிவித்த சுமந்திரன் இன்று வாக்குக்கேட்டு வந்துள்ளார்- என்றார். (ம-26)

## கொரோனா நிலைமையிலும் தேர்தலை சிறப்பாக நடத்தலாம்

### கூறுகின்றார் பெரமுனவின் சிசிர ஜயகொடி

தேர்தலை காரணமாகக்கொண்டு இதுவரை நாட்டில் எவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என்றும், அதனால் கொரோனா நிலைமையின் கீழ் தேர்தலை நடத்துவதில் எந்தச் சிக்கலும் இல்லை என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலைக் காரணமாகக் கொண்டு கொரோனா நோய் தொற்றியமைக்கான சம்பவங்கள் குறித்து இதுவரை தகவல்கள் இல்லை. கொரோனா நோய் பரவுவதற்கும் தேர்தலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதனால், தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்பது தெளிவாகியுள்ளது - என்றார். (து)

# நாடாளுமன்றத்தில் பேசா மடந்தைகள்!

## இதுவே அதிகாரத்தின் எதிர்பார்ப்பு என்கின்றார் ரிசாத் பதியுதீன்

**மன்னார், ஜூலை 20**

**சிறுபான்மைத் தலைமைகளை பாதுகாக்கும் தேவை இப்போதைய காலகட்டத்தில் இருக்கின்றது. அடுத்த நாடாளுமன்றுக்கு பேசாமடந்தைகளும் பொம்மைகளுமே வரவேண்டுமென அதிகார வர்க்கம் எதிர்பார்க்கின்றது இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளரான ரிஷாட் பதியுதீன்.**

மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிறுபான்மைத் தலைமைகளை பாதுகாக்கும் தேவை இப்போதைய காலகட்டத்தில் இருக்கின்றது. அடுத்த நாடாளுமன்றுக்கு பேசாமடந்தைகளும் பொம்மைகளுமே வரவேண்டுமென அதிகார வர்க்கம் எதிர்பார்க்கின்றது. அதற்கு நீங்கள் சோரம்போய் விடக்கூடாது,

இந்த அரசு பதவிக்கு வந்ததிலிருந்து, எமது சமூகத்துக்கு நடந்தவைகளும், நடந்துகொண்டிருப்பவை குறித்து நான் சொல்லி நீங்கள் தெரிய வேண்டியது இல்லை. ஜனாஸா எரிப்புத் தொடர்பில், அரசும் அரச இயந்திரமும் நடந்துகொண்ட முறை உங்களுக்குத் தெரியும். எம்மைச் சீண்ட வேண்டும், கோபத்துக்குள்ளாக்க வேண்டும், பழிவாங்க வேண்டும், எமது உள்ளங்களை நொருக்க வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்துக்காகவே, சர்வதேச விதிமுறைகளையும் மீறி, எமது ஜனாஸாக்களை கண்முன்னே எரித்தார்கள். இதன் மூலம் அவர்கள் இன்பம் காண்கிறார்கள். அதுமாத்திரமின்றி, இவ்வாறான செயற்பாடுகள் சிங்கள ஆதரவுத் தளத்தையும், பேரினவாதிகளுடனான நெருக்கத்தையும் தமக்குப் பெற்றுத்தருமென பெரிதும் நம்புகின்றார்கள். இதுதான் யதார்த்தம்.

பேரினவாதக் கூலிகளுக்கு நீங்கள் வாக்குககளை வழங்கினால், அது சமூகத்தை ஆபத்துக்குள் தள்ளும். பாதிப்பை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் சமுதாயத்தில் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு அதுவே காரணமாக அமையும். எனவே, வரப்போகும் நாடாளுமன்றத்தில் சமூகத்துக்கான குரல்கள் ஒலிக்க வேண்டும். அதற்காக உங்கள் வாக்குகளை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

பயங்கரவாதத்துடன் என்னையும் எனது குடும்பத்தையும் வேண்டுமென்று முடிச்சுப்போட்டு, சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றனர். எனது சகோதரரை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, மூன்று மாத காலம் காரணமில்லாமல், தடுப்புக் காவலில் வைத்திருப்போர், இப்போது என்னையும் சிறையில் தள்ள முயற்சிக்கின்றனர். மிக உச்சளவில் எனக்கு துன்பம் தருகின்றார்கள். எந்தவொரு அரசியல்வாதியும் எதிர்கொள்ளாத கஷ்டங்களை நான் அனுபவிக்கின்றேன். என்னை பாடாய்ப் படுத்துகின்றார்கள். விசாரணைக்கு அழைத்து விட்டு, தேவையற்ற கேள்விகளையும், சம்பந்தமில்லாத விடயங்கள் பற்றியும் துருவித்துருவிக் கேட்கின்றார்கள். பெரிய குற்றவாளியை விசாரிப்பது போன்று கதை பரப்புகின்றார்கள்.

தேர்தல் நெருங்கும்போது, இவ்வாறு என்னை மட்டும் திரும்பத் திரும்ப விசாரிப்பதேன்? எமது வெற்றியைத் தடுப்பதும், கட்சியை அழிப்பதும் சமுதாயத்துக்கான எனது குரலை நசுக்குவதுமே அவர்களின் திட்டமாகும்' என்றார். (ம-56)


## பதவியைத் துறந்த பின்னரும்கூட சலுகை அனுபவித்தவர் சம்பந்தன்

### சிறிகாந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை இழந்த பின்னரும் எதிர்க்கட்சி தலைவருக்குரிய சொகுசு பங்களாவிலேயே வாழ்ந்த முதலாவது அரசியல்வாதி இரா.சம்பந்தனே. சொகுசு பங்களா விடயத்தை அரசாங்கத்துடன் பேசி உங்களால் சாதிக்க முடியுமென்றால், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை ஏன் பேசி சாதிக்க முடியாமல் போனது என கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் யாழ் மாவட்ட வேட்பாளர் என்.சிறிகாந்தா.

வடமராட்சி, கலிகையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். அவர் மேலும் தெரிவித்ததாவது: தமிழ் மக்களின் பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வலியுறுத்தியதன் விளைவாக தமிழ் மக்கள் இழந்தவை ஏராளம். இருந்தும் இதுவரை அரசியல் நீதி கிடைக்கவில்லை. எமது மக்கள் நடுத்தெருவில் நிற்கிறார்கள். கிட்டத்தட்ட 94 அரசியல் கைதிகள் 12 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரைக்கூட கூட்டமைப்பினால் விடுவிக்க முடியவில்லை. கூட்டமைப்பின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட மாளிகை, பதவிபோன பின்னரும் அவரிடம் விட்டு வைக்கப்பட்டது. அதற்கு சொல்லப்பட்ட காரணம், அவருக்கு வயதாகி விட்டது. எம்.பிக்குரிய வீடு மாடியில் ஒதுக்கப்பட்டால், மாடிப்படியேற முடியாது என காரணம் சொல்லப்பட்டு, அரசின் ஆதரவுடன், எதிர்க்கட்சித் தலைவராக வந்த மஹிந்த ராஜபக்சவின் சம்மதத்துடன், அவருக்கு உரித்தில்லாத எதிர்க்கட்சித் தலைவர் மாளிகையில் அவர் தொடர்ந்து வாழ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.




இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை இழந்த பின்னரும் எதிர்க்கட்சி தலைவருக்குரிய சொகுசு பங்களாவிலேயே வாழ்ந்த முதலாவது அரசியல்வாதி இரா.சம்பந்தனே - என்றார். (ம)

## பரம்பரைக்கே சொத்துச் சேர்த்தவர்கள் ஏழைகளிடம் வாக்குக் கேட்கின்றார்கள்

### கிழக்கின் முன்னாள் முதல்வர் நஸீர் அஹமட் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 20

30 வருட நாடாளுமன்ற பதவிக் காலத்தில் தங்களது பரம்பரைக்கே சொத்துச் சேகரித்து வைத்துவிட்டு, ஒழுகிக் கரையும் குடிசைகளில் வாழும் ஏழை மக்களிடம் இப்போது மீண்டும் வாக்குக்கேட்க வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களை இம்முறை நாடாளுமன்றப் படியேற அனுமதிக்காதீர்கள் என்று தெரிவித்தார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான நஸீர் அஹமட்.

ஏறாவூரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலத்துக்குக் காலம் வரும் தேர்தல்களையொட்டி அரசியல்வாதிகள் காலாகாலம் தாம் ஏமாற்றும் மக்களின் காலடிக்கு வருகிறார்கள். வந்து, நம்பிக்கை கொடுத்து, மீண்டும் மக்களை ஏமாற்றுவதும் எதிர்க்கட்சியை குற்றம் சுமத்துவதும் இதைச் செய்வேன் அதைச் செய்வேன் என முடி யாதவற்றையும் முடியுமாக்கிக்காட்டுவதும் வாடிக்கையாகி விட்டது.

தேர்தலில் வெற்றிபெற்றவுடன் மக்களுக்கு எதுவும் செய்யாமல் பழையபடி அடுத்த தேர்தலில் புதுக்கதைகளை கொண்டுவருவதும் பேரப்பிள்ளைகள் கூட சுகபோகமாக வாழுமளவுக்குச் சொத்துக்களை வாங்கியும், வேலை வாய்ப்புக்களை விற்றும், கொந்தராத்துக்காரர்களிடம் கொமிஷன் பெற்றும், இளைஞர் யுவதிகளை பரிதவிக்கவிடுவதுமான அரசியல் பரம்பரையைத்தான் இதுவரை கண்டு வந்திருக்கின்றோம்.

ஆனால் எனது அரசியல் பிரவேசம் இத்தகைய அரசியல் ஏமாற்றுப் பேர்வழிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. நான் அரசியலுக்குள் வந்தபின் எனது பரம்பரைக்கான சொத்துக்களைச் சேகரிக்கவில்லை. ஏற்கெனவே சுயமாகச் தொழில் செய்து சொத்துக்களைச் சேர்த்து அதில் ஏழை எளியவர்களுக்கும் வழங்கிவிட்டு உங்கள்முன் வந்தேன். வாக்குறுதிகளைத் தந்தேன். நிறைவேற்றி நின்றேன் - என்றார். (ம)

# 52ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு அபிவிருத்திகள் செய்துள்ளோம்!

## கூட்டமைப்பு எதுவும் செய்யவில்லை என்பவர்கள் ஊடகங்களைக் கவனிக்கவில்லை என்று அர்த்தம்



**கொடிகாமம், ஜூலை 20**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று இன்று பலர் கேட்கின்றனர். அவர்களிடம் நான் கேட்கின்றேன் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்யவில்லை?'. வடக்கில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 52 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்.**

மந்துவில் கிழக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழுக்கள், கட்சிகள் என்று சுமார் 33 தரப்பினர் போட்டியிடுகின்றனர். அதில் கூட்டமைப்பைத் தவிர்த்தால் ஏனைய 32 தரப்புக்களில் சுமார் 320 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்கள் அனைவரினதும் இலக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மழுங்கடிப்பதே.

2015ஆம் ஆண்டு நாம் நாடாளுமன்றம் சென்ற வேளையில் வலிகாமம் வடக்கில் 7 ஆயிரம் ஏக்கர் காணி அரசால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. பாதுகாப்புத் தேவைகளுக்காக இந்த ஏழாயிரம் ஏக்கரும் தேவையென்று அரசு தெரிவித்தது. எனினும் நாம் விடவில்லை. தொடர்ச்சியாக வாதாடினோம். 4 ஆயிரம் ஏக்கர்களை விடுவித்துள்ளோம். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்காவிட்டால் ஆயிரத்து ஐநூறு ஏக்கர்களை மேலதிகமாக விடுவிக்க நடவடிக்கை எடுத்திருப்போம்.

நாம் நாடாளுமன்றம் செல்லும்போது 227 அரசியல் கைதிகள் இருந்தார்கள். இப்போது 91 கைதிகள் இருக்கிறார்கள். எவருடைய முயற்சியால் இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். எத்தனையோ வருடங்கள் சிறையில் இருந்தவர்களை நாம் விடுவித்தோம். பலம் மிக்க அமைப்பாக கூட்டமைப்பு இருந்தபடியால் எமது கோரிக்கை செவிசாய்க்கப்பட்டது.

இதற்கப்பால் எத்தனையோ வேலைகள் நடைபெற்றன. சர்வதேச சமூகத்துடன் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. சர்வதேச சமூகம் தமிழர்கள் பிரதிநிதிகளாக அங்கீகரித்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தான். டக்ளஸையோ அங்கயனையோ அல்லது விஜயகலாவையோ தமிழர்களின் பிரதிநிதிகளாக சர்வதேச சமூகம் ஏற்கவில்லை.

இன்று எங்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது யார்?. தொடக்கியது ஐக்கிய தேசிய கட்சி. முடித்து வைத்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சி. ஆனால் அது பின்னர் பொதுமக்கள் முன்னணி என்று பெயர்மாற்றம் பெற்றுள்ளது. பெரும்பான்மை இனம் தமிழர்களை எப்போதும் ஏமாற்றிக்கொண்டுதான் இருக்கும். எங்களிடம் வந்து வாக்குக்கேட்க அவர்களுக்கு உரிமையில்லை.

வெற்றிவிழா கொண்டாடிய ராஜபக்ச மண்ணை முத்தமிட்டதைக் கண்ணால் கண்டோம். வெற்றி விழா கொண்டாடும் போ்து தமிழர்கள் மனம் எவ்வளவு புண்படும் என்று அவர் நினைத்தாரா?. இது ஒன்று போதாதா அவர்களைப் புரிந்து கொள்ள? வெற்றிவிழாக்குப் பின்னர் பல வாக்குறுதிகளை சர்வதேச சமூகத்துக்கு மஹிந்த கொடுத்தார். இந்தியாவுக்கும் கொடுத்தார். ஆனால் அவற்றில் ஒன்றைக்கூட இதுவரை அவர் நிறைவேற்றவில்லை.

தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்று மஹிந்த கேட்கின்றார். எதற்காகக் கேட்கின்றார். அவரின் நோக்கம் 19ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது ஒழிப்பதுதான். அவ்வாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் ஒருபோலி அரசமைப்பையும் மஹிந்த தயாரிப்பார். அதன்மூலம் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக அவர் சர்வதேசத்துக்குக் காட்டிக் கொள்வார்.

திருகோணமலை மாவட்டம் இன்று எங்கள் கையைவிட்டுப் போய்க்கொண்டு இருக்கின்றது. ஒரு சிங்களவர் இல்லாத இடங்களில்கூட விகாரைகள் கட்டப்படுகின்றன. இதே நிலைமை யாழ்ப்பாணத்திலும் இடம்பெறலாம். நீங்கள் கூட்டமைப்புக்கு வழங்கும் வாக்குகள் கூட்டமைப்பைப் பலப்படுத்தும். கூட்டமைப்புப் பலம்பெற்றால் அதுவே தமிழர்களின் பலமாகவும் அமையும் – என்றார். (ம-159)

# இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டப்படும்!

## முற்போக்குகூட்டணி அறைகூவல்

கொழும்பு, ஜூலை 20

இராணுவ மயமாக்கலை நோக்கிப் பயணிக்கும் இந்த அரசுக்கு எதிராகவும், ஜனநாயகத்துக்காகவும் சிறுபான்மையின மக்கள் ஒன்றுபட்டு வாக்களிக்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த ஆட்சியானது இராணுவமயமாக்கலை நோக்கிப் பயணிக்கின்றது. அமைச்சின் செயலாளர் பதவிகளுக்குகூட இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரச நிறுவனங்களின் பதவிகளும் இராணுவ அதிகாரிகளுக்கே வழங்கப்படுகின்றன. இவ்வாறு இராணுவ மயமாக்கலை நோக்கிப் பயணிக்கும் அரசாங்கத்துக்கு வாக்களிப்பதா அல்லது ஜனநாயகத்தின் பிரகாரம் செயற்படும் சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணிக்கு வாக்களிப்பதா என்பது தொடர்பில் நீங்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும். இது மிகவும் முக்கியமான தேர்தல். எமது இருப்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சிறுபான்மையின மக்கள் ஒற்றுமையாக செயற்படவேண்டும்' - என்றார்.

(ம-44)

# அலி சப்ரியால் முடியாதது வேட்பாளர்களால் முடியுமா?

## இம்ரான் மஹரூப் கேள்வி

கொழும்பு, ஜூலை 20

அலிசப்ரியால் முடியாததை பிரதேச வேட்பாளர்களால் பெற்றுத்தரமுடியுமா என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளருமான இம்ரான் மகரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிண்ணியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு முற்றுமுழுதாக சிறுபான்மை மக்களுக்கு எதிரான அரசு. எமது முஸ்லிம்களின் ஜனசாவை எரித்தார்கள். அன்று அதற்கெதிராக பொதுஜன பெரமுனவின் முஸ்லிம் பிரிவு தலைவர் அலி சப்ரிகூட பேசினார். ஆனால் அவரால்கூட அதனைத் தடுக்க முடியவில்லை.

ஜனாதிபதியின் வெற்றிக்காக அயராது பாடுபட்டவர், அவசியமான நேரத்தில் சட்ட உதவிகளை வழங்கியவர், ஆளும் கட்சி முஸ்லிம் பிரிவுத் தலைவர் அலிசப்ரியால்கூட இந்த அரசிடம் இருந்து எமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தர முடியாவிடின் எமது பிரதேசங்களில் உள்ள வேட்பாளர்களால் எமக்காக எதைப் பெற்றுத்தர முடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும் - என்றார். (ம)




# கம்பனிக் காணிகள் அனைத்தும் அங்குள்ள தொழிலாளர்களுக்கே

## சுட்டிக்காட்டுகின்றார் ஐ.ம.ச. வேட்பாளர்

கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நட்டத்தை எதிர்நோக்கி வரும் பெருந்தோட்டதுறை கம்பனிகளுக்கு சொந்தமான காணிகள் அனைத்தும் அங்கு தொழில் புரிந்துவரும் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்கப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகிர்மக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்காக பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு வந்த ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் இந்த பரிசோதனைகளிலிருந்து விலகிய மைக்கான காரணம் என்ன? அரசின் அச்சுறுதல்களா? இதனுடன் தொடர்புடைய உண்மை விவகாரங்களை அரசு மறைக்காமல் நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இது ஒரு ஜனநாயக நடைமுறையில்செயற்படும் நாடு. நாங்கள் தேர்தலுக்கு முகங்கொடுக்கு பயந்து இது தொடர்பில் கேள்வியெழுப்புகின்றோம் என்று கூறுகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தேர்தலுக்குத் தயாராகவே இருக்கின்றது.

தற்போது நாட்டு மக்கள் மீதும் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் மீதும் பொருளாதாரச் சுமையை சுமத்திவரும் கம்பனிகள் தொடர்பில் அவதானம் செலுத்திவருகிறோம்.

இதேவேளை, தொழிலின்றி இருப்பவர்களையும் இந்த வேலைத்திட்டங்களில் இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (கு)

# சுகாதாரப் பரிசோதகர்கள் விவகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 20

பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களே எஞ்சியுள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் நாளை செவ்வாய்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளது என்று அதன் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.



தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள், சுகாதார வழிகாட்டல்கள் உள்ளடங்கிய வர்த்தமானி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

கொரோனா ஒழிப்புக்கான அனைத்துச் செயற்பாடுகளிலிருந்தும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விலகியுள்ள நிலையில் தேர்தலை நடத்துவதில் இதுபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி யொன்றில் தெரிவித்திருந்தார். எனவே இவ்விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, இன்று திங்கட்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவில் கொரோனா ஒழிப்பு மத்திய நிலையமொன்று நிறுவப்பட வுள்ளது. இதில் சுகாதாரத்துறையினர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், ஊடகத்துறையினர் உள்ளிட்ட பலர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,எ)

## தலைமறைவாகியிருந்த 8 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 20

கோப்பாய் பொலிஸார் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்தவர்களே நேற்றைய தேடுதலின் போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி மற்றும் கல்வியங்காடு பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.எ.20)

## சுகாதார வழிகாட்டல் வர்த்தமானி: அறிவுறுத்தலை மீறினால் சிறைத் தண்டனை!!!

கொழும்பு, ஜூலை 20

பொதுத்தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானியின் பிரகாரம் அதனை மீறுபவர்களுக்கு எதிராக ஆறுமாத காலம்வரை சிறைத்தண்டனை பெற்றுக்கொடுக்க முடியும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு வெளிவந்திருக்கின்றது. இந்த வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சட்ட திட்டங்களை மீறும் யாராக இருந்தாலும் அந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் யாராவது இந்தச் சட்டத்தை மீறியதற்காக குற்றவாளியானால் அவருக்கு ஆறுமாதம் சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாவுக்கு அதிகப்படாத அபராதம் விதிக்கலாம். அல்லது இந்த இரண்டையும் மேற்கொள்ளலாம். இந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கமைய, தண்டனைச் சட்டத்துக்கமைவான குற்றங்களை யாராவது செய்தால் அவர்களுக்கு அந்த சட்டத்தில் இருந்து வெளியேறி, அந்தத் தண்டனைச் சட்டத்தின் அடிப்படையில் அல்லது தேர்தல் சட்டத்தை மீறும் பட்சத்தில் மேற்கொள்ளப்படும் குற்றத்துக்கமைய நடவடிக்கை எடுக்கமுடியும். இதுதொடர்பாக வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தற்போது வெளியிடப்பட்டிருக்கும் தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல் அடங்கிய வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கே இருக்கின்றது. இந்த வர்த்தமானி தேர்தல் அறிவிக்கப்பட்டு அதன் பெறுபேறுகள் வெளியாகும் வரையான காலத்துக்கு நடைமுறையில் இருக்கும், என்றார். (ஒ,எ)

## இளைஞன் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

சாவகச்சேரி, மடத்தடிப் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது வீட்டில் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த நிலுசன் (வயது25) என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-159)

## மக்களைப் பலிகொடுத்து தேர்தல் நடத்துகின்றார்கள் ராஜபக்சக்கள்

*ரணில் பகிரங்கக் குற்றச்சாட்டு*

திருகோணமலை, ஜூலை 20

கொரோனா பீதியை நாம் ஏற்படுத்துகின்றோம் என்று இந்த அரசு கூறுகின்றது.



கொரோனா பற்றிப் பயம் இல்லாவிட்டால் ஏன் பாடசாலைகளை மீண்டும் மூடவேண்டும்? நாட்டின் சுகாதாரத்தைப் பலி கொடுத்தாவது, மக்களைப் பலிகொடுத்தாவது இந்தத் தேர்தலை நடத்தவே அரசு விரும்புகின்றது. இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு அதிகாரத்துக்கு வந்ததுமுதல் எந்த அபிவிருத்தியும் நடக்கவில்லை.

கொவிட் 19 தொற்று மட்டுமே ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரம் மிகவும் கீழ் நிலைக்குச் சென்றுள்ளது.

அரசு கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக கூறுகின்றனர். உலக சுகாதார நிறுவனம் கொரோனா 2ஆவது அலையும் தொடங்கி விட்டது என்று கூறுகின்றது, என்றார். (ஒ,எ)

## சிப்பாயை மோதிய இளைஞன் கைது

கைதடி இராணுவச் சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் சிப்பாயின் கால் முறிவடைந்தது. அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்று மதியம் இந்த விபத்து நடந்துள்ளது.

கைதடிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய் மோட்டார் சைக்கிளை மறித்துள்ளார். வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டையிழந்து சிப்பாய் மீது மோதியுள்ளது. அதில் சிப்பாய் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ,எ)

## மஹிந்தவின் மொட்டு அணியே விதி மீறல்களில் முதலிடம்

கொழும்பு, ஜூலை 20

தேர்தல் வன்முறைகள், விதிமுறை மீறல்களில் ஈடுபட்டதாக சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு எதிராகவே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வரை தமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் குறித்த விவரங்களை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராக 259 முறைப்பாடுகளும், ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக 98 முறைப்பாடுகளும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக 38 முறைப்பாடுகளும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக 20 முறைப்பாடுகளும், ஈ.பி.டி.பிக்கு எதிராக 12 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. சட்டவிரோத பரப்புரை குறித்தே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்துள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள் குறித்தும் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ,எ,22)

# புலி ஆட்சிசெய்த மண்ணில் வேறெதற்கும் இடமில்லை!

## இளங்கதிர் இப்படித் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 20

தமிழீழத் தேசியத் தலைவரையும், தமிழீழத்தையும் நேசிக்கின்ற ஒவ்வொரு தமிழ் மகனும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ய வேண்டும். புலி ஆட்சி செய்த இந்த மண்ணிலே வேறு எதுவும் ஆட்சி செய்ய முடியாது என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.இளங்கதிர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்ததன் பின்னர் நடைபெறுகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இது இருக்கின்றது. ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்புப் பிரதிநிதிகளும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து போராடிய முன்னாள் போராளிகளும் ஒன்றிணைந்து தேர்தல் களத்தில் பணியாற்றுகின்றோம்.

உண்மையில் துரோகங்கள் சூழ்ந்து நிற்க, அந்தத் துரோகங்கள் எதிரிகளுக்குத் துணை நிற்க இந்தக் களத்திற்குள்ளே எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலை நிமிர்த்திக் கொண்டுதமிழர்களின் அபிலாசைகளை முன்னெடுப்பதற்காக இந்தப் பயணத்தை மேற்கொள்வது மிகமிக வரவேற்கத்தக்க விடயம். நாங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கின்றோம். எதிர்காலத்தில் எமது இனம் சார்ந்த உரிமை தொடர்பில் எவ்வாறு எங்களுடைய கட்டமைப்புகளைப்பலப்படுத்திக்கொள்ள முடியுமோ அந்தளவிற்கு நாங்கள் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் மிகப்பெரும் சக்தியாக இலங்கை நாடாளுமன்றத்திலே செயற்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாகத்தான் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை எமது தாயகத்தில் நாங்கள் நிறுவிக் கொள்ள முடியும்.

தமிழீழத் தலைவரின் தீர்க்க தரிசனத்தால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்களை அனுப்பி வைத்தார். அவரது சிந்தனையின் பிரகாரம் அவர் எடுத்த அந்தத் தீர்மானம் இன்று எமக்குப் பெரும் சக்தியாக இருக்கின்றது.

புலி ஆட்சி செய்த இந்த மண்ணிலே வேறு எதுவும் ஆட்சி செய்ய முடியாது. நாங்கள் கோளைகள் அல்லர். எமது உரிமையை நாங்கள் எந்தவிதத்தில் வென்றெடுக்க முடியுமோ அந்த வழியில் தான் நாங்கள் செல்கின்றோம். எமது தலைவர் சொல்லியுள்ளார் போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் கொள்கை மாறாது. எமது கொள்கையின் அடிப்படையில் நாங்கள் எங்கள் போராட்டத்தை ஆரம்பித்தோம். தற்போது அதனை ஜனநாயக வழியில் பெற்றுக் கொள்வதற்காகப் போராடுகின்றோம் - என்றார். (ம-150)

# எமது மண்ணுக்காக வாக்கிடுங்கள்

## வேட்பாளர் உதயராசா கோரிக்கை

மன்னார், ஜூலை 20

இந்த மண்ணைப் பறி கொடுக்காமல் எமது மண்ணை மீட்டெடுப்பதற்காக நீங்கள் உங்கள் வாக்கு உரிமையைச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என தமிழர் சமூக ஜனநாயாகக் கட்சியின் செயலாளர் நாயகமும் வேட்பாளருமான ப.உதயராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த மாவட்டம் பறிபோகும் நிலைமைக்கு மாறியுள்ளது. எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களினால் இந்த மண் காப்பாற்றப்படவில்லை. ஆனால் இந்த மண்ணை முன்னாள் மறைமாவட்ட ஆயர்தான் காப்பாற்றியுள்ளார். அவர் இந்த சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். நாங்கள் இந்த வன்னிப் பெரும் நிலப்பரப்பை காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் - என்றார். (ம-56)

# ஈரோஸுக்கு ஆசனம் இல்லையேல் தமிழருக்கு விமோசனமும் இல்லை

## கட்சியின் தலைமை வேட்பாளர் முருகதாஸ் இவ்வாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20




நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் கட்சிக்கு ஒரு ஆசனமாவது கிடைக்காவிட்டால் தமிழ் மக்களுக்கு விமோசனம் என்பதே இல்லாத அவல நிலை ஏற்படும் என்று அந்தக் கட்சியின் தலைமை வேட்பாளர் ரவிராஜ் என்று அழைக்கப்படும் சி.முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞானபம் நேற்று (நேற்றுமுன்தினம்) வெளியிடப்பட்டுள்ளது. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் சமையல் செய்வது போன்றது. அதாவது எதிர்வரும் 5 திகதி சமையலுக்கு உலையில் அரிசி போடுவார்கள். அந்த அரிசி வேகவில்லை என்று பொய் சொல்லியே எதிர்வரும் 5 வருடங்களைக் கழித்து வடுவார்கள். தமிழ் அரசியல் கைதிகளை கூட்டமைப்பால் விடுவிக்க முடியாது. மாறாக இன்னமும் அரசியல் கைதிகளை உருவாக்க அல்லது எண்ணிக்கையை அதிகரிக்கவே அவர்களால் முடியும்.

கூட்டமைப்பினரிடம் அபிவிருத்தி குறித்தோ அல்லது, அரசியல் தீர்வு குறித்தோ எந்த ஒரு பொறிமுறையும் இல்லை. தலைவரின் தூர நோக்கத்தாலே கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த நோக்கத்தை கூட்டமைப்பால் நிறைவேற்ற முடியாது. கூட்ட மைப்பினர் போன்றே நீதியரசர் விக்னேஸ்வ ரனும் திட்டங்கள் எதுவும் இல்லாத கதைகளையே கூறிவரு கின்றார். அவராலும் தமிழினத்திற்கு எந்தவிதமான பயனையும் பெற்றுக் கொடுக்க முடியாது - என்றார். (ம-20)

# அரசியல்வாதிகள் மக்களிடத்தில் பயப்படவேண்டும்

## நீல் சாந்த தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 20

அரசியல்வாதிகள் மக்களுக்கு பயப்பட வேண்டும் என வன்னியில் ஐக்கிய வன்னி மக்கள் கட்சி சார்பாக போட்டியிடும் முதன்மை வேட்பாளர் நீல் சாந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னி மக்களுக்கு உதவி செய்வதற்காகவே நான் வந்தேன். ஆனால் மக்கள் கேட்டதால் அரசியல் செய்கின்றேன். மக்களுக்கு நாங்கள் பல்வேறு உதவிகளை சொந்தப் பணத்தில் செய்துள்ளோம். மக்களுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய அபிவிருத்திகளே அவசியமாகவுள்ளது. வன்னியில் இருந்த அரசியல்வாதிகள் சரியாக அரசியல் செய்திருந்தால் நாங்கள் இங்கு வந்து அரசியல் செய்ய வேண்டியதில்லை. நாடாளுமன்றம் சென்றால் எனது வாகன சலுகைப் பத்திரத்தின் பணத்தை மக்களுக்கே முழுமையாக வழங்குவேன். தமிழ், சிங்கள மக்கள் எம்முடன் இணைந்துள்ளார்கள். தேர்தலின் போது வீடுவீடாகச் செல்லும் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்தபின் மக்களிடம் செல்வதில்லை. சாதாரண மக்கள் அரசியல்வாதிக்கு பயம். ஆனால் அது இல்லை அரசியல். அரசியல்வாதிகள் தான் மக்களுக்குப் பயப்பட வேண்டும். எனவே மக்கள் இதனை புரிந்து வாக்களிக்க வேண்டும் - என்றார். (ம-18)

# வன்னிப் பெண்களுக்கு உதவி கிடைக்கவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ரசிக்கா பிரியதர்சினி கடும் அதிருப்தி

போரால் பாதிப்படைந்த வன்னிப் பெண்களுக்கு உதவிகள், அபிவிருத்திகள் எவையும் செய்யப்படவில்லை - என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்பாளரான ரசிக்கா பிரியதர்சினி.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்னியில் போர் காரணமாக 90 ஆயிரத்திற்கு மேற்பட்ட விதவைப் பெண்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அத்துடன் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கை, கால் அங்கவீனரான பெண்கள் இருக்கிறார்கள். எந்தவித உதவிகளையும் அரசு அவர்களுக்குச் செய்யவில்லை. வன்னியில் இருந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அபிவிருத்தி எதனையும் செய்யவில்லை - என்றார்.

# இருப்பைப் பாதுகாப்பதற்கு ஐ.ம.சவுக்கு வாக்களியுங்கள்

## கோருகின்றார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஜூலை 20

சிறுபான்மையின மக்களின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மக்கள் ஓரணியில் திரண்டு ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளித்தோம். எனினும், துரதிஷ்டவசமாக அவர் தோல்வியடைந்துவிட்டார். பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி வாக்குக் கேட்டதால் தெற்கு மக்கள் மொட்டு கட்சி வேட்பாளருக்கு வாக்களித்து ஜனாதிபதியாக்கினர். பாதுகாப்பை முன்னிலைப்படுத்தித்தான் கொட்டகலைக்கு இராணுவம் வந்துள்ளதோ என்னவோ தெரியவில்லை.

மிகவும் முக்கியமான தேர்தல். எமது இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். சிறுபான்மையின மக்கள் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். தொலைபேசிக்கு வாக்களித்துவிட்டு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சஜித் பிரேமதாச தலைமையிலான அணிக்கு வாக்களித்தால் மட்டுமே ஜனநாயகத்தைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்- என்றார்.

(கு)

# கூட்டமைப்பைத் துண்டாட சிங்களதேசம் விரும்புகிறது

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் துளசி தெரிவிப்பு

**வவுனியா, ஜூலை 20**

**சம்பந்தனை விலைபேசி வாங்கமுடியாத சூழ்நிலையின் காரணமாகத்தான் கூட்டமைப்பை பல்வேறு துண்டுகளாக சிங்கள தேசம் உடைத்துக் கொண்டிருக்கின்றது. இதனைத் தடுத்து கூட்டமைப்பைப் பலப்படுத்துவது எமது பெரும் பொறுப்பாகும் என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள மக்களுக்கும் தமிழர்களுக்கும் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. சிங்கள ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சியைத் தீர்மானிப்பதற்காகவும், அதனைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காகவுமே தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர். சிங்கள இனவாதிகளால் தமிழ் மக்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக வடக்கு கிழக்கிலே உள்ள ஒட்டுமொத்தத் தமிழர்களும் செயலாற்றினார்கள்.

இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தின் பின்புலத்தில் இருந்து வந்திருக்கின்ற எமது தமிழ் இனம் வெறுமனே அபிவிருத்திக்கும், சலுகைகளுக்கும் விலைபோய்விட கூடாது.

தெற்கிலே விலைவாசி குறைத்தால் அந்த அரசுக்கு வாக்களிக்கும் கலாசாரம் உண்டு. ஆனால் வடக்கு கிழக்கிலே அறிவிக்கப்படுகின்ற எந்தச் சலுகைகளுக்குப் பின்னாலும் தமிழர்கள் செல்வதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை போராளிகள் தாங்கி நிற்பதற்கான காரணம் ஒன்றுதான். இன்றும் சம்பந்தன் ஐயாவை விலைபேசி வாங்க முடியாத காரணத்தால் தான் கூட்டமைப்பை பல்வேறு துண்டுகளாக சிங்கள தேசம் உடைத்துக் கொண்டிருக்கின்றது. இதனைப் பலப்படுத்துவது எமது பெரும் பொறுப்பும் கடமையுமாகும்.

கிழக்கிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க முடியாமலும், அவர்களைத் தேசியவாதத்தில் இருந்து பிரிக்க முடியாமலும் இருந்த நிலையில் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக உருவாக்கப்பட்ட ஒரேயொரு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பேரம் பேசலினூடாக விலைக்கு வாங்கப்பட்டார். அந்தப் பலவீனமான மனிதர் தற்போது தன்னை ஒரு பலமானவராகக் காட்டிக் கொண்டு மீண்டும் இந்தத் தேர்தல் மேடைக்கு வந்திருக்கின்றார்.

நாங்கள் ஒன்றை மட்டும் சொல்லுகின்றோம் - அபிவிருத்திதான் தேவை, வேலைவாய்ப்புத்தான் தேவை என்றால் நேரடியாக சிங்களவர்களுக்கே வாக்களித்து விடுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் மறக்க வேண்டாம். காணி தந்து, வீடு தந்து அதில் என்ன செய்தாலும் அக்காணிக்கு உறுதி பெறப்படாத வரைக்கும் எப்போது வேண்டுமானலும் நீங்கள் வீதிக்கு வர நேரிடும். இது தான் உரிமை தொடர்பில் உள்ள விளக்கம். உரிமை தொடர்பிலான ஆரம்பக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படாமல் ஏற்படுகின்ற அபிவிருத்தியும் இவ்வாறு தான் நிலையில்லா மல் இருக்கும். முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டார்கள். தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தார்கள் என்றெல்லாம் சொல்கின்றார்கள். ஆனால், ஹிஸ்புல்லா கட்டிய பல்கலைக் கழகத்திற்கு ஏற்பட்ட நிலைமையை அனைவரும் சிந்தித்துப் பார்த்தால் உண்மை நிலைமை விளங்கும்.

ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிநிற்கின்றது. எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் ஒவ்வொரு கல்லையும் பிடுங்கி எடுப்பதற்கு பேரினவாதம் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றது. இந்த விடுதலைப் போராட்டத்திற்கு வடக்கு எந்தளவுக்கு அர்ப்பணிப்பினைச்செய்துள்ளதோ அதற்கு ஒருபோதும் சளைக்காத அளவில் கிழக்கும் இந்தப் போராட்டத்திற்கு இரத்தம் சிந்தியுள்ளது - என்றார். (ம-110)

## தொற்றுநோய் தடுப்பு பணிகளிலிருந்து சுகாதாரப் பரிசோதகர்கள் விலகல்

கொழும்பு, ஜூலை 20

அனைத்து தொற்று நோய்த் தடுப்பு பணிகளில் இருந்தும் நேற்றுமுன்தினம் முதல் சுகாதார பரிசோதகர்கள் விலகியுள்ளதாக என்று பொது சுகாதார பரிசோதகர் சங்கம் அறிவித்துள்ளது.

கடவத்தையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அந்த சங்க நிர்வாகிகள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் கொவிட்19 உள்ளிட்ட தொற்று நோய்களை தடுக்கும் நோக்கில் அதற்கான சட்டரீதியான அதிகாரத்தை உருவாக்குமாறு அவர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர். (ரி1)




## விசேட சோதனையில் 1563 பேர் கைது

கொழும்பு, ஜூலை 20

மேல் மாகாணத்தில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 24 மணி நேரத்தில் 1563 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணி முதல் நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேர காலப் பகுதியிலேயே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் 771 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களாவர். மேலும் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச் சாட்டில் 349 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 158 பேரும், சட்ட விரோத மதுபானக் குற்றச்சாட் டில் 206 பேரும், ஐஸ் போதைப்பொருடன் 14 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவைதவிர ஏனைய குற்றச்சாட்டில் மேலும் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)




### இராஜாங்கனையில்

## 4 ஆயிரத்து 644 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 20

அனுராதபுரம் இராஜாங்கனைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் வரை 24 கிராமங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 644 பேர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் கிராமங்களை விட்டு வெளியில் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் ஆலோசகராக கடமையாற்றிய கொரோனா நோயாளி ஒருவர் மரணச் சடங்கொன்றில் கலந்துகொண்ட காரணத்தினால், இவர்கள் தனிமைப் படுக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 281 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 146 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

### குருநாகல் அரச மண்டபம் சேதம்:

## தொல்பொருள் திணைக்களத்தின் மீது அகிலவிராஜ் காரியவசம் பாய்ச்சல்

கொழும்பு, ஜூலை 20

குருநாகல் ராஜதானியின் பண்டைய கால அரச மண்டபத்துடன் கூடிய கட்டடத்திற்கு குருநாகல் மாநகர சபை சேதம் ஏற்படுத்தியுள்ளது. இதற்கு தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க முழுமையாக பொறுப்புக்கூற வேண்டும் என்று முன்னாள் கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த இடத்தில் ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பாக கண்டறிவதற்காக நேற்று அங்கு சென்றிருந்தபோதே முன்னாள் அமைச்சர் இந்த குற்றச் சாட்டை முன் வைத்துள்ளார்.

இப்படியான தொல்லியல் முக்கியத்துவம் மிக்க இடங்கள் பற்றி கண்டறிவது தொல்பொருள் திணைக்களத்தின் பொறுப்பு. அந்தத் திணைக்களம் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்துள்ளதன் காரணமாக இந்த வரலாற்று பெறுமதிமிக்க இடங்கள் அழிந்து வருகின்றன.

நான் கலாசார விவகார அமைச்சராக இருந்த ரோது நடத்திய விசாரணைகளின் பின்னர் செனரத் திஸா நாயக்கவை, தொல் பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து நீக்கினேன்.

அவரை மீண்டும் அந்தப் பதவிக்கு நியமித்தமை தற்போதைய அரசாங்கம் செய்துள்ள தவறு.

செனரத் திஸாநாயக்கவின் செயற்திறன் இன்மை என்பது இவ்வாறான தொல் பொருள் அழிவுகளில் இருந்து தெளிவாகியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)



## 5 கடற்படையினரே சிகிச்சையில்

கொழும்பு, ஜூலை 20

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட கடற்படையினரில் 5 கடற்படை உறுப்பினர்கள் மாத்திரமே தற்போது வைத்திய சாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதற்கமைய, கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த கடற்படை உறுப்பினர்களின் எண்ணிக்கை 901ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக வைத்தியசாலைகளில் மொத்தமாக 906 கடற்படையினர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இக்கடற்படை உறுப்பினர்கள் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள போதிலும், சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய, மேலும் 14 நாட்களுக்கு அவர்களைத் தனிமைப் படுத்த கடற்படையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பி டத்தக்கது. (ரி3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சுயகட்டுப்பாடே தீர்வு

நல்லூர்ப் பெருந்திருவிழாவில் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப எவ்வளவு பக்தர்களை அனுமதிக்க முடியுமோ, அத்தனைபேரையும் அனுமதிக்க உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார். கண்டிப் பெரஹராவில் கூட மட்டுப்படுத்தப்பட்ட நபர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் எனப் பிடிவாதமாக நிற்கின்ற அரசு , இப்படி என்ன நல்லூர்க் கந்தனுக்கு மட்டும் தாராளமயக் கொள்கையைக் கடைப்பிடிப்பது ஏன்?

எல்லாம் தேர்தல் செய்யும் மாயம்தான். நயினை நாகபூசணித் திருவிழாவின் போதும், வெறும் 50 பக்தர்களை மட்டுமே அனுமதித்ததால் நயினாதீவு மக்களிடையே அரசு மீது அதிருப்தி ஏற்பட்டிருந்தது. அதேபோன்ற அதிருப்தி தேர்தல் நெருங்கும் சமயத்தில் நல்லூரில் ஏற்படுமாயின் அது அரசின் சார்பில் போட்டியிடும் கட்சிகளின் வாக்குகளில் கடுமையான சரிவை உண்டுபண்ணிவிடும். எனவேதான் நல்லூர்க் கோயிலின் கொள்ளளவுக்கு ஏற்ப குறைந்தது 500 பேரையாவது திருவிழாக்காலத்தில் அனுமதிக்க மஹிந்த, இராணுவத்தளபதிக்கும், சுகாதாரப் பணிப்பாளருக்கும் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார். ஏனெனில் நல்லூர் என்பது யாழ்ப்பாணத்தையும் தாண்டி தமிழர்களின் தனி அடையாளமாக, அவர்களின் உணர்வுகளோடு கலந்தது என்பது தென்னிலங்கையர்களுக்கு நன்கு தெரியும். அத்தோடு நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா என்பது தனியே ஒரு மதம்சார் நிகழ்வாக மட்டுமல்லாது, உறவுகளின் சங்கமமாக, கலை, கலாசாரங்களின் வெளிப்படுகை மையமாக உருக்கொண்டிருக்கும். எனவேதான் நல்லூரோடு விளையாடி எதற்கு வலிந்து வினையை வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் அரசு இப்படி ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கக்கூடும்.

ஆனால் இப்போது பிரச்சினை என்னவெனில், கொரோனாவின் இரண்டாம் அலை மேலெழுகின்றதாகச் சொல்லப்படும் இப்போதைய காலகட்டத்தில் நல்லூரில் பெருங்கூட்டம் கூடுவதென்பது வலியச் சென்று கொரோனாவை வரவழைப்பதற்கு ஒப்பானதாகும். தமிழர்களின் உணர்வுகளோடு கலந்துவிட்ட ஒரு திருவிழாவில் கலந்துகொள்ளாமல் தவிர்ப்பதென்பது, மானசீகமாகக் கடினமான காரியம்தான். இருப்பினும் சில விடயங்களைத் தியாகம் செய்வதன்மூலமே பெரிய நன்மைகளை அடையமுடியும். தப்பித்தவறி சந்தடியில்லாமல் எவரேனும் ஒரு கொரோனாத் தொற்றாளி, நல்லூர்த் திருவிழாவில் கலந்து கொண்டால் ஏற்படும் விளைவுகள் எப்படி இருக்கும்? கோயில் உடனடியாக மூடப்படுவதுடன், அனைத்து பக்தர்களும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவர். அப்படி தனிமைப்படுத்தப்பட்டவர்களில் சிலருக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், ஒட்டுமொத்த யாழ்ப்பாணமும் முடக்கநிலைக்குள்ளாக்கப்படும். இப்படி ஒரு நிலை வருவதைத்தான் நாம் விரும்புகிறோமா?

இதற்குரிய மாற்று வழியை ஆலய நிர்வாகமே கண்டறிய வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதோடு, ஆலயத்துக்குச் செல்லும் சகல பக்தர்களின் உடல்வெப்பநிலை பரிசோதிக்கப்பட்ட பின்னரே உள்நுழைய அனுமதிக்கப்படவேண்டும். அத்தோடு ஆலயத்தில் தனியாள் இடைவெளியைப் பேணியபடி உள்வாங்கக்கூடிய பக்தர்களின் எண்ணிக்கையை நிர்வாகம் வரையறை செய்து அதனடிப்படையில் ஆலயத்துக்குள் நுழைவோரைத் தீர்மானிக்கலாம்.

அரசியல் தரப்புக்களின் தேவைகளுக்கு ஒத்திசைந்தோடாமல், எங்களுக்கு நாங்களே சுய கட்டுப்பாட்டை விதிப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். நல்லூர் கந்தசுவாமி ஆலயம் இதுவரை தனது தனித் தன்மையை அரசியல் தரப்புக்களுக்கு அடிபணியாமல் பேணி வருகின்றது. இந்த விடயத்தில் ஆலய நிர்வாகம் துணிந்து சரியான முடிவை எடுக்கவேண்டும் என்பதுடன், அதனை மக்கள் அனைவரும் பின்பற்றி ஒத்துழைக்க வேண்டும்.



# நிவாரணம் வழங்கலாம் கட்டணம் அதிகரிக்கவிடோம்

## கூறுகின்றார் போக்குவரத்து அமைச்சர்



**கொழும்பு, ஜூலை 20**

**தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கலாமே தவிர, அவர்கள் பேருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

அங்குணகொல பெலஸ்ஸவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தச் சந்தர்ப்பத்திலும் பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு இடமளிக்கும் நிலைமை தற்போது இல்லை. பேருந்து உரிமையாளர்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. அவர்களின் வருமானம் குறைவடைந்துள்ளமை பற்றி நாம் கலந்துரையாடியுள்ளோம்.

அவர்களுக்கு வேறு நிவாரணங்களை வழங்குவதற்கு அரசு என்ற ரீதியில் நாம் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். எவ்வாறிருப்பினும் பேருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

பேருந்துகளில் பயணிப்போருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன. பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் இயன்றவற்றை நாம் நிறைவேற்றி யிருக்கின்றோம். அவர்களிடம் நாம் நிலவரம் பற்றி தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் அனைத்தும் பொதுமக்களின் பிரயாணத்துக்காக தயார் நிலையில் உள்ளன.

ஆசனங்களுக்கு போதுமான அளவு பிரயாணி களை பேருந்துகளில் அனுமதிக்குமாறு சுகாதார அமைச்சு ஆலோசனை வழங்கியிருக்கிறது. இதன் காரணமாக அலுவலக நேரங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனினும், வழமையான சாதாரண நேரங்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை கூட தற்போது இல்லை. சுகாதாரத்துறைக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது. - என்றார். (த)



# இருபது தென்னைகளை நாசமாக்கின யானைகள்

## கனகராயன்குளம் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஜூலை 20

வவுனியா, கனகராயன்குளம் வடக்கு பகுதியில் 20க்கும் மேற்பட்ட பயன்தரு தென்னை மரங்களை யானைகள் அழித்துள்ளன என்று தென்னந்தோட்ட உரிமையாளரொருவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா, கனராயன்குளம் வடக்கு பகுதியில் ஆற்றங்கரையை அண்டியதாக உள்ள மேட்டுக் காணியில் காணப்படும் தென்னந்தோட்டத்திலேயே யானைகள் தென்னைகளை முறித்துச் சேதமாக்கியுள்ளன.

வருமானம் தரும் பயிர்களை யானைகளிடம் இருந்து காப்பாற்ற உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அதன் உரிமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் யானைகளின் நடமாட்டம் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (த-18,110)

# கத்தி முனையில் சங்கிலி கொள்ளை

## ஒருவர் விசாரணையில்

மன்னார், ஜூலை 20

முகமூடி அணிந்து வந்து கத்தியுடன் வீடு புகுந்த கொள்ளையன் பெண்ணின் கழுத்தில் கத்தியைவைத்து 3 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றுள்ளான் என்று முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட இராசமடுக் கிராமத்தில் நேற்று அதிகாலை 5.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் கணவன் தொழில் நிமித்தம் நானாட்டானுக்கு புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

கொள்ளையன் பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளான். அந்தப் பெண் திருடன் என்றுகூறியவாறு போராடியபோதும் சங்கிலியை அறுத்துக்கொண்டு தான் கொண்டுவந்திருந்த கத்தியை வீட்டில் தவறவிட்டு விட்டுத் தப்பியோடி விட்டான்.

கொள்ளை தொடர்பில் அந்தக் குடும்பத்தினர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

சந்தேகத்தில் ஒருவர் பொலிஸ் விசாரணையில் உள்ளார் என்று முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர். (த-213)



பீ.ஏ.அந்தோனிமார்க்,
மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம்,
தலைவர் மன்னார் சமாதான அமைப்பு.

# கடும்போக்காளர்கள் உரிமை தரப்போவதில்லை!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் ஒரு முக்கியமான தேர்தல் ஆகும். இந்தத் தேர்தலின் முடிவு தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கும் மனித உரிமைப் போராட்டங்களுக்கும் ஓர் உந்து சக்தியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.கடந்த கால தமிழ் மக்களின் போராட்டம் 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் மௌனத்துடன் முடிவுற்றுள்ளது. தமிழ் மக்கள் போராடி வந்த வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி இன்றுவரை கிடைக்கவில்லை. வடக்கு, கிழக்கு என்பன தனித் தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்றரை லட்சம் மக்கள் போரில் கொல்லப்பட்டுள்ளார்கள். மூன்றரை லட்சம் மக்கள் வவுனியாவில் உள்ள திறந்த வெளி (மெனிக்பண்ணை) சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு பல ஆண்டுகளின் பின்பு விடுதலை செய்யப்பட்டனர்.போரால் அழிக்கப்பட்ட வடக்கு ,கிழக்கு மாகாணங்கள் தற்போது ஓரளவு மீள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. எனினும் 2015ஆம் ஆண்டு ஐ.நா. தீர்மானத்தின்படி இன்னும் இங்கு,


1. இராணுவம் குறைக்கப்படவில்லை.
2. சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவில்லை.
3. பொறுப்புக் கூறலுக்காக, வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கிய விசாரணைகள் தொடங்கப்படவில்லை
4. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கதி தெரியவில்லை
5. போர் அழிவுகளுக்கு இழப்பீடுகள் வழங்கப்படவில்லை
6. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை
7. படைவசமுள்ள காணிகள் பலவும் இன்னும் விடுவிக்கப்படவில்லை
8. உண்மைகளைக் கண்டறியும் விசாரணைகள் இன்று வரையும் நிறைவடையவில்லை.

2019 ஆம் ஆண்டு தீர்மானத்தின்படியும் தலா இரண்டு ஆண்டுகள் வீதம் 4 வருடங்கள் கால அவகாசம் மேலும் கொடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 2021ஆம் ஆண்டு வரையும் காலஅவகாசம் கொடுக்கப்பட்டு இருந்தும், இன்று வரை செயற்பாடுகள் ஆமை வேகத்திலேயே உள்ளன.

போர் முடிந்து 11ஆண்டுகள் சென்ற நிலையில் மனித உரிமைமீறல்களுக்கும் குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் ஐ.நா.சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்களால் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்படியான சூழலில் அரசாங்கமும் இலங்கை இராணுவமும் பயமில்லாமல் இன அழிப்புகளை மீண்டும் செய்வதற்கு போதிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளன. தருஸ்மன் அறிக்கை கொடூர இன அழிவுகளை கோடிட்டுக் காட்டியுள்ளது. ஆனாலும் இலங்கை அரசும், இராணுவமும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள் பற்றிய நீதி நியாயத்தை மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சரியாக வெளிப்படுத்தவில்லை.

குற்றம் செய்தவர்களுக்கு எதிராக இதுவரையும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. காலம் தாழ்த்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி எனச் சொல்வர்கள். 2009போர் முடிந்த பின்பு உடனே ஐ.நா.செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு வந்து உலங்கு வானூர்த்தி மூலம் போரினால் தரை மட்டமாக்கப்பட்டிருந்த வன்னிப் பிரதேசத்தையும், மெனிக் பண்ணையில் இருந்த போரினால் பாதிக்கப்பட்ட மூன்றரை லட்சம் மக்களையும் பார்வையிட்டார். அதன்போது அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து இதற்குரிய நிவாரணங்களை உடன் வழங்குமாறு பணித்துச் சென்றிருந்தார். விடுதலைப்புலிகளைச் சாட்டி தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என சர்வதேசத்தை மூளைச் சலவை செய்து 10ற்கு மேற்பட்ட சர்வதேச நாடுகளின் உதவியைப் பெற்று விசேடமாக இந்தியா,பாகிஸ்தான்,சீனா போன்ற நாடுகளின் போர்விமானங்கள் மூலம் தமிழர் தாயகத்தை அழித்தது மட்டுமல்லாமல் அங்கிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளையும் ஐ.நா.பிரதிநிதிகளையும் போருக்கு முன்பு இலங்கை அரசு வெளியேற்றியிருந்தது. காரணம் போர்க்குற்றங்கள் வெளிவந்துவிடும் என்ற பயமாகும். எது எப்படி இருந்தாலும் புரையோடிப் போய் இருக்கும் தமிழர் இனப்பிரச்சினையையும் தமிழர் அரசியல் உரிமைகளையும் விரைவில் தீர்க்கப்பட வேண்டியது காலத்தின் கடமையாகும்.

இனிநாங்கள் ஐ.நா. சபையையோ, இலங்கை அரசையோ அல்லது சர்வதேசத்தையே நம்பி இருப்பதில் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. இதற்குரிய ஒரே ஒரு வழி இலங்கை அரசை நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதாகும். இலங்கை அரசின் ஏமாற்று வித்தைகள் தற்போது ஐ.நா சபைக்கும் சர்வதேசத்துக்கும் நன்கு விளங்கும். தற்போது இருக்கும் சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்கு சாதகமாக உள்ளதை அனைவரும் நன்கறிவர். இறுதியாக நடந்த 2020 மார்ச்சில் நடந்த ஐ.நா.கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் 2015ஆம் ஆண்டு 30/1அனுசரணையில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.



2015 ஆம் ஆண்டு இலங்கை அரசு சர்வதேச நாடுகளின் முன்னிலையில் ஐ.நா. சபையில் போர்க் குற்றத்தை ஏற்றுக்கொண்டு 2015ஆம் ஆண்டு 30/1தீர்மானத்தை நிறைவேற்ற முன்வந்தது. தற்போது இலங்கை அரசு பொய்யான காரணங்களைக் கூறி அதிலிருந்து விலக முடியாது. சர்வதேசத்தோடு ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வந்த அரசு இரு தரப்பின் சம்மதமின்றி தனித்து ஒரு தரப்பாக விலக முடியாது. தமிழ் மக்களின் இன அழிப்பு, சொத்து அழிப்பு சம்பந்தமாக பல சாட்சியங்கள் இருக்கின்றன.

1.2012ஆம் ஆண்டு ஐ.நா.தருஸ்மன் இன அழிப்பு சம்மந்தமான அறிக்கைகள்.
2. பரணகம ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகள்.
3.2012ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபை அறிக்கைகள்
4.கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணத்துக்குமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் (LLRC அறிக்கைகள்)
5.விக்கி லீக்ஸ்ஸின் ஊடக அறிக்கைகள், கேபிள் தகவல்கள்
6.2012ஆம் ஆண்டு "பெட்ரீ" எனப்படும் ஐ.நா. செயலாளருக்கான உள்ளகமதிப்பீட்டுக்குழுவின் அறிக்கை விசேடமாக 82பந்தி என்பன.
7. இலங்கையில் கடந்த 1956,1958,1977,1983ஆண்டுகளில் தமிழ் இனக்கலவரம் சொத்து அழிப்புக்கள்.
8. ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கைகள்.

தமிழ் மக்கள் இன்னும் விட்டுக்கொடுத்து மௌனமாக இருப்பதற்கு காலமில்லை. ஏனெனில் மிச்சமாயிருக்கும் தமிழ் மக்களையும் தமிழர் தாயகத்தையும் காப்பாற்ற வேண்டுமாயின் இலங்கை தமிழ் மக்கள் சார்பாக, இனச்சுத்திகரிப்புக்கு எதிரான வழக்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். நாடு கடந்த தமிழீழ அரசின் தலைவரும் இதற்குரிய ஒழுங்குகளை ஆரம்பித்துள்ளார் என அறியக் கிடக்கிறது. த.தே.கூட்டமைப்பும் இதற்குரிய முன் ஆயத்தங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே ராஜபக் ஷ பலதடவைகள் 13+ (பதின் மூன்று மேலதிகமாகவும்) கொடுப்பேன். வடகிழக்கு மாகாணங்களுக்கு சுயநிர்ணய உரிமை கொடுப்பேன். காணி பொலிஸ் அதிகாரம் கொடுப்பேன் என்று கூறி ஏமாற்றியுள்ளார். திரும்பவும் அதைத்தான் செய்வார் என்பது நூறுவீதம் உண்மையானது.

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு அணியின் கீழ் இந்த நோக்கத்தை அடைவதற்கு 2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதை முன்நிறுத்தி செயற்பட வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்குரிய ஒரே ஒரு பலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தான் என்ற நிலைப்பாட்டில் வீட்டுச் சின்னத்துக்கு புள்ளடி இடுவதன் மூலம் தந்தை செல்வநாயகத்தின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டிய 21 நாடாளுமன்ற பிரதிநிதிகளை பெறுவது மட்டுமல்ல மேலதிக தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவத்தையும் கைப்பற்றி சர்வதேசத்தையும் ஐ.நா.சபையையும் எமது பக்கம் திருப்பவேண்டும்.

தற்போதுள்ள புதிய ஜனாதிபதியும் புதிய பிரதமரும் பௌத்த பிக்குகளும் சிங்கள அடிப்படைவாதிகளும் தமிழ் மக்களுக்குரிய அரசியல் உரிமையையும் சமஸ்டி ஆட்சியையும் சுயநிர்ணய உரிமைகளையும் கொடுக்க முடியாது என திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். இது சிங்கள பௌத்த நாடு என்று கூறி வருகிறார்கள். இதனால் சர்வதேசமும் ராஜபக் ஷக்களின் வலைக்குள் அகப்பட்டுள்ளார்கள். அதற்கு முன்பு ஆட்சி நடத்திய முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஜனாதிபதி ரணசிங்க பிரமதாச ,ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆகியோர் ஓரளவுக்கு ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மதித்து வந்தார்கள்.

ஆனாலும் ராஜபக் ஷ குடும்பத்தின் 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு ஆட்சி காலத்தில் தமிழர் தாயகம் சிதைக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்து அழிக்கப்பட்டார்கள். இவ்வளவு இனப்படுகொலைகளையும் செய்து, தமிழர் தாயகத்தையும் தரை மட்டமாக்கிய ராஜபக் ஷக்கள் 2/3 பெரும்பான்மையைப் பெற்று மாவட்ட மக்களுக்கு பொறுப்புக் கூறக் கூடிய நாடாளுமன்ற முறையை ரத்துச் செய்து சர்வதிகாரமுள்ள ஜனாதிபதி முறையைக் கொண்டு வருவதற்கான செயற்றிட்

ந.சதாசிவஐயர்
(ஓய்வுபெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)



# வீட்டிலேயே அனுஷ்டிப்போமே ஆடி அமாவாசையை!

ஒவ்வொரு அமாவாசையிலும் விரதமிருந்து பிதிர்தர்ப்பணம் செய்து வழிபடுவது சைவ சமய மக்களின் கடமைகளில் முக்கியமான ஒன்றாக இருந்தது. எனினும் உத்தராயண ஆரம்பத்தில் தை அமாவாசையும் தெட்சிணாயன ஆரம்பத்தில் ஆடி அமாவாசையும் சிறப்பான அமாவாசைகளாகக் கொள்ளப்பட்டன. ஆடி அமாவாசையன்று இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமல்ல சைவர்கள் வாழும் இடமெல்லாம் தீர்த்தக்கரைகளிலே நீராடி தர்ப்பணம் செய்து தென்புலத்தார்க்கு நீர்க்கடன் நிறைவேற்றுவது புனிதக்கடமையாகும். சீனர்கள்கூட ஆடிஅமாவாசையன்று வீட்டுக்கு வெளியே உணவுப்பண்டங்களை வைத்து வழிபடுவதுடன் தென்புலத்தாருக்கு செலவுக்கு பணம்வேண்டும் என்பதற்காக போலி நாணயத்தாள்களை உணவுப்பண்டங்களுக்கு அருகே தீயிலிட்டு எரிப்பார்கள்.

வருடந்தோறும் ஆடி அமாவாசையன்று பல ஆலயமூர்த்திகள் கடற்கரைக்கு எழுந்தருளுவர். அங்கு ஆடி அமாவாசைத் தீர்த்தம் நடைபெறும். விசேடமாக மாவைக் கந்தனும் நகுலேஸ்வரரும் கீரிமலைத் தீர்த்தக்கரைக்கு எழுந்தருளுவர். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் முதல்நாள் இரவே வந்திருந்து அதிகாலையில் கடலில் நீராடி, கரையில் தர்ப்பணம் செய்து அம்மை அப்பனையும், கந்தனையும் வழிபட்டு மடங்களில் போசனம் செய்து செல்வர். செல்வச் சந்நிதியிலும் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறும். யுத்தகாலத்தில் கடற்கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தபோது வீட்டில் ஸ்நானம் செய்து ஆலய தீர்த்தக்கரைகளில், கேணிகளில் முகப்பில் தர்ப்பணம் செய்து ஆலய தரிசனம் செய்து வீட்டில் விரத உணவருந்தி பிதிர்க்கடன் மறவாது நிறைவேற்றினர். கடற்கரைகள் விடுவிக்கப்பட்டதும் மீண்டும் கீரிமலையில் ஆடி அமாவாசை கடல் நீராடல் , தர்ப்பணம், சிவபூமி மடத்தில் போசனம் என சிறப்பாக நடைபெற்று வந்தது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுவர்.

இவ்வருடம் கெரோனா அலை ஓய்ந்து, நிம்மதிப் பெருமூச்சுடன் சுகாதார அதிகாரிகளின் வழிப்படுத்தலில் கீரிமலையில் ஒன்றுகூடாது ஆங்காங்கே கடற்கரைகளில் நீராடி தர்ப்பணம் செய்யலாம் என நினைத்திருக்கும் வேளையில் எதிர்பாராது மீண்டும் தொற்றுப் பரவத் தொடங்கியுள்ளது. ஆதலால் மக்கள் தாமாக விழிப்புடன் செயற்படவேண்டியது சமூகத்துக்காற்றும் பெருந்தொண்டாகும். ஆதலால் இவ்வருடம் ஆடி அமாவாசையின் போது கீரிமலைக்கு போவதை கட்டாயமாகத் தவிர்ப்பதுடன் எந்தவொரு கடற்கரையிலோ, குளத்திலோ, ஆலயக் கேணியிலோ, நீராடுவதையும் தவிர்த்து. எமது வீட்டுக் கிணற்று நீரையே புனித தீர்த்தமாகத் தியானித்து வணங்கி அதில் நீராடி அருகில் உள்ள ஆலயம் சென்று தர்ப்பணம் செய்து இயலுமானால் அந்தணருக்கு அரிசி, மரக்கறி தானம் கொடுத்து அல்லது தீபமேற்றி வணங்கி வழிபட்டு வீட்டிலேயே உணவருந்தி திருப்தியடைவோம்.

இவ் வருடம் ஆடிஅமாவாசை, வாரத்தின் தொடக்க நாளில் வருவதாலும் தேர்தல் காலமாதலாலும் ,அரச ஊழியர்கள் விடுமுறை பெற முடியாதிருக்கும். எமது சமயத்தில் எதிலும் சிரத்தைதான் முக்கியம் அதனால்தான் ஆண்டுத்.திவசத்தை (திதியை) சிரார்த்தம் என சொல்லப்படுகிறது. இப்படித்தான் செய்யவேண்டும் என எமது சமயம் எதையும் கோடிட்டுக் காட்டுவதுமில்லை, கட்டாயப்படுத்துவதுமில்லை. அதிகாலையில் செய்யமுடிந்ததை செய்து வழிபட்டு தம் வழமையான கடமைக்கு ஏகலாம். ஆதலால் கொரோனா மற்றும் தேர்தல் கடமை குறுக்கிடுவதால் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கும் மேலாக நாமும் சிறிது சிந்தித்து செயற்படுதல் நமக்கும் சமுதாயத்துக்கும் செய்யும் பெருந்தொண்டாகும். ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் அவர் போன இடம், வந்த இடம் என பல நூற்றுக் கணக்கில் மக்கள் தனிமைப்படுத்தப்படுவதைக் காண்கிறோம். அண்மையில் தரிசனத்துக்காக திறக்கப்பட்ட திருப்பதி தேவஸ்தானம் கொரோனாத் தொற்றாளர் ஒருவரால் மீண்டும் சங்கடத்துக்குள்ளானதைப் பார்த்தோம். தற்செயலாக ஆடி அமாவாசையின்போது கீரிமலை சென்ற ஒருவர் கொரோனாத் தொற்றாளராக இனங்காணப்பட்டால் நிலைமை எந்தளவுக்கு பயங்கரமானதாக இருக்கும் என சிந்தித்துப்பார்ப்போம். முழு வடக்கு மாகாணமே முடக்கப்படும் நிலை உருவாகலாம். ஆதலால் இந்த முறை ஆடி அமாவாசையை வீட்டிலிருந்து அருகே இருக்கும் ஆலயம் சென்று பிதிர்க்கடன் ஆற்றி திருப்பதியடைவோம். ஆடி அமாவாசை வழிபாட்டில் எம் முன்னோரை நினைத்து வழிபடுவதுடன் நின்றுவிடாமல் சுனாமியிலும் யுத்தத்திலும் (ஞாதி) நாதியற்றுப்போனவர்களையும் ஒருகணம் நினைந்து அந்த ஆத்மாக்களும் சாந்தியடைய வழிபடுவோம்.

(தொடர்ச்சி)

> தமிழரின் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பேயன்றி வேறொன்றும் இல்லை. சர்வதேச நீதிமன்றத்தில் தமிழ் மக்களின் வழக்குகள் வெற்றியடைய வேண்டுமாயிருந்தால் தந்தை செல்வநாயகத்தின் வீட்டுச் சின்னத்துக்கு புள்ளடியிடுங்கள்.

டத்தை முன்னெடுத்து வருகிறார்கள்.

19ஆவது திருத்தச் சட்டத்தையும் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் ஒழித்துவிட முயற்சிக்கிறார்க்ள. சுதந்திரமான ஆணைக்குழுக்களை அழிக்கப் பார்க்கிறார்கள். 2/3 பெரும்பான்மையைப் பெற்று புதிய அரசியல் அமைப்பு மூலம் ஒற்றையாட்சியுள்ள சிங்கள பௌத்த நாடு ஒன்றை அமைக்கவிரும்புவதாக கூறுகிறார்கள். இப்படியான ஆபத்தான ஒருநிலை ஏற்படுவதற்கு முன்பு நாம் விழிப்பாக இருந்து எமது போராட்டத்தை சிறந்த முறையில் வழிநடத்த வேண்டும். எமது பலம் பிரிக்கப்படாமல் ஒன்று பட்டு இருக்க வேண்டும். 75 சதவீதம் உள்ள சிங்களவர்களும் கடும் போக்குவாதிகளும் பௌத்த பிக்குகளும் தமிழ் மக்களுக்குரிய ஜனநாயக உரிமைகளைக் கொடுக்க முன்வரமாட்டார்கள்.

கொரோனாவினாலும் ஊடரங்குச் சட்டத்தினாலும் ஒட்டுமொத்தமாக எல்லா மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வெளிநாடுகளில் இருந்து நன்கொடைகளும் பண உதவிகளும் இலங்கைக்குக் கிடைத்துள்ளன. அவை சரியான முறையில் பகிரப்படவில்லை. கொரோனா வைரஸ் நோய் இன்னும் சரியான முறையில் கட்டுபடுத்தாமல் அரசு உடன் தேர்தலை நடத்த எத்தனிப்பதாக ஜே.வி.பி. யின் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சகல கட்சிக்காரரும் தமது தேர்தல் விஞ்ஞாபனக் கொள்கைகளை வெளிப்படுத்த கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். தேர்தல் ஆணையாளரின் தீர்மானங்களை நிறைவேற்ற அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே ராஜபக் ஷ குடும்பமானது 2005-2015ஆண்டு வரையிலான 10 ஆண்டுகள் ஆட்சி நடத்தி உள்ளது. தற்போது 2020-2025ஆண்டு வரையுமான 5 ஆண்டுகளுக்கு தங்களது சர்வாதிகார ஆட்சியை நடத்தப் போவதாகக் கூறிவருகிறார்கள்.

225 நாடாளுமன்ற பிரிதிநிதிகளைக் கொண்டுள்ள சல மக்களுக்கும் பதில் கூறும் ஜனநாயக ஆட்சியை அழித்து தங்களது குடும்ப சர்வாதிகார ஆட்சியை நடத்த ராஜ பக்சக்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக எதிரணிக் கட்சிகள் குற்றஞ்சுமத்தி வருகின்றன. இதற்கு மேலதிகமாக அரசும் மாற்றுக்கட்சிகளும் த.தே.கூட்டமைப்பின் மேலும் தமிழ் அரசுக் கட்சியின் மேலும் வீண்பழி சுமத்தி, மக்கள் மத்தியில் கூட்டமைப்புக்குள்ள நற்பெயரை மழுங்கடித்து வருகின்றன.

தந்தை செல்வாவின் தலைமையில் உருவாக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் ஆசீர்வாதத்துடன் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையும் சுயநிர்ணய உரிமையையும் ஜனநாயகத்தையும் சிங்கள தேசத்துக்கு காட்டிக்கொடுத்து அடகு வைத்ததில்லை. தமிழரின் பலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பேயன்றி வேறொன்றும் இல்லை. சர்வதேச நீதிமன்றத்தில் தமிழ் மக்களின் வழக்குகள் வெற்றியடைய வேண்டுமாயிருந்தால் தந்தை செல்வநாயகத்தின் வீட்டுச் சின்னத்துக்கு புள்ளடியிடுங்கள். கூட்டமைப்பு சர்வதேசத்தின் உதவியுடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வெற்றிபெற்று தமிழ் மக்களின் சமஷ்டி ஆட்சியையும் சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுக்க வேண்டும்.







# அரசரவை இடிப்புக்கு எதிராக குருநாகலில் ஆர்ப்பாட்டம்

குருநாகல், ஜுலை 20

**குருநாகல் இராசதானிக்கு சொந்தமான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த அரச மண்டபத்தை இடித்து சேதப்படுத்தியமைக்கு கண்டனம் தெரிவித்தும், அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கண்டறிந்து உட னடியாக சட்டநடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்துக்கு வலியுறுத்தும் வகையிலும் ஆர்பாட்டமொன்று நேற்றுமுன்தினம் குருநாகலில் இடம்பெற்றது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாலேயே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நளின்பண்டார, அசோக்க அபேசிங்க மற்றும் தேரர்கள், பிரதேசவாசிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டகாரர்கள், எமது உரிமைகளைப் பாதுகாக்க மக்களே முன்நோக்கி வாருங்கள், ஜனாதிபதி அவர்களே செவிமடுங்கள், எமது உரிமைகளைப் பாதுகாத்துத் தாருங்கள், பொய்மையான ஆணைக்குழு எமக்குத் தேவையில்லை என்று கோசம் எழுப்பியதுடன், ஜனாதிபதியும் பிரதமரும் அமைதியாக இருப்பது ஏன்?, தேசப்பற்றுள்ள 69 இலட்சம் பேரும் எங்கே? இப்போது நலமா? போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். ஆர்ப்பார்ட்டக்காரர்கள் அனைவரும் கோசங்களை எழுப்பியவாறு குருநாகல் பொலிஸ் நிலை யத்திற்குச் சென்றதுடன் கட்டட உடைப்பு தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு முறைப்பாடு அளித்தனர். இதற்கு பொலிஸார், சம்பவம் தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆர்பாட்டக்காரர்களுக்குத் தெரிவித்தனர். (ரி2)

# புலனாய்வுத் தகவல்களை பகிரும் அவசியம் இல்லை

*முன்னாள் பொலிஸ்மா அதிபர் சாட்சியம்*



கொழும்பு, ஜுலை 20
இலங்கையின் அரச புலனாய்வு சேவை, பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டாலும் புலனாய்வுத் தகவல்களை பொலிஸாருடன் பகிர்ந்துக்கொள்ளும் கடப்பாட்டை அது கொண்டிருக்கவில்லை என முன்னாள் பொலிஸ் மா அதிபர் என் கே இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் சாட்சியாக அழைக்கப்பட்ட அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
தாம் பொலிஸ் மா அதிபராகப் பதவி வகித்த காலப்பகுதியில் அரச புலனாய்வு சேவை தமது பதவியின் கீழ் இருக்கவில்லை. எனினும் அப்போது அரச புலனாய்வு துறைக்குப் பணிப்பாளராக இருந்த நிலந்த ஜெயவர்த்தன, நாட்டில் அதிகரித்து வந்த இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பான தகவல்களை பொலிஸ் அதிகாரிகளுடன் பகிர்ந்துக்கொண்டார்.
அத்துடன் அவர் அரச புலனாய்வுத்துறையினருக்கும், பொலிஸாருக்கும் அனுப்பிய கடிதங்களில் தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமாத் இஸ்லாம் போன்ற அமைப்புக்கள் முஸ்லிம் இளைஞர்கள் ஊடாக தீவிரவாதத்தை பரப்புவதன் காரணமாக நாட்டில் பாரிய சேதம் ஏற்பட லாம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.
2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் தேசிய பாதுகாப்பு சபையும், இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பாக அடிக்கடி கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. அதையடுத்து இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டில் பரவுவதைக் கண்காணிக்கும் வகையில் சிறப்பு பொறிமுறை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது என்று முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே இலங்கக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.



எகட் கரித்தாஸ் நிறுவன ஏற்பாட்டில் திருகோணமலையில் உள்ள நிறுவத்தின் அலுவலக மண்டபத்தில் கொவிட்19 தொடர்பில் திருகோணமலை மாவட்ட பிராந்திய ஊட கவியலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வும் துண்டுப்பிரசுர விநியோகமும் நேற்றைய தினம் இடம்பெற்றது. (ரி1)

# தபால் கட்டண முறைகேடு

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கைது

கொழும்பு, ஜுலை 19
தபால் கட்டணங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், மாகாண சபை உறுப்பினருமான நிமால் ஆர். பீரிஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.
113,460 ரூபா தபால் கட்டணங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கு அமைவாகவே, இவர் கடுவல நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை உத்தரவை அடுத்து தலங்கம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாரால் இன்று கடுவல நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது அவருக்கு பிணை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (ரி2)

# காற்றுடன் கூடிய மழைக்கு சாத்தியம்

கொழும்பு: ஜுலை 20
இலங்கையில் சில பகுதிகளில் கடுமையான மின்னல் ஏற்படும் என்று வானிலை அவதான நிலையம் 'சிவப்பு' எச்சரிக்கை விடுத்துள்ளது.
கிழக்கு, வடமத்திய, மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், குருநாகல், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கடுமையான இடிமின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும். இந்தப் பகுதிகளில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான கனமான மழைவீழ்ச்சி ஏற்படக்கூடும். இடியுடன் கூடிய மழையின்போது வலுவான காற்று வீசக்கூடும்.
மின்னல் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ரி3)



கே.கே.எஸ் வீதி கொக்குவிலில் உள்ள ஐயப்பன் ஆலயத்துக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் மாலை ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத் துக்குள்ளாகியுள்ளன. இரு வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டிருந்தபோதும் எவருக்கும் பெரிய காயங்கள் ஏற்பட்டிருக்கவில்லை எனவும் பொதுமக்களின் உதவியுடன் விபத்துக்குள்ளானோர் மீட்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# மேல் மாகாணத்தில் 3,000 பேருக்கு பொலிஸாரால் எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 20
மேல் மாகாணத்தில் முகக் கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுகளுக்காக 3,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் காலை 5 மணிமுதல் இன்று அதிகாலை 5 மணி வரையான 24 மணி நேர காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் போதே 3,061 பேருக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
அதன்படி முகக் கவசம் அணியத் தவறிய 2,093 பேருக்கும், சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய 968 பேருக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, கடந்த மாதத்தில் முகக் கவசம் அணியத் தவறியமைக்காக மேல் மாகாணத்தில் 1200 க்கும் மேற்பட்டவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பி டத்தக்கது. (ரி3)

# புவனேகபாகு மன்னரின் அரசவை தகர்ப்பு; விசாரணைகளைத் துரிதப்படுத்த உத்தரவு

கொழும்பு, ஜுலை 20
குருநாகல் புவனேகபாகு மன்னரின் அரசவை தகர்க்கப்பட்ட இடத்தைப் பிரதமரால் நியமிக்கப்பட்ட குழு நேற்றுப் பார்வையிட்டது. குருநாகல் புவனேகபாகு மன்னரின் அரசவைக் கட்டடம் கடந்த 14 ஆம் திகதி தகர்க்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐவர் அடங்கிய நிபுணர் குழுவொன்றினை பிரதமர் நியமித்தார்.
குறித்த சம்பவம் தொடர்பில் துரித விசார ணையை மேற்கொள்ளுமாறு இந்தக் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
விசாரணை அறிக்கையை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். (ரி1)

# அரசியலில் சகல மட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு அவசியம்

## முன்னாள் சபாநாயகர் வலியுறுத்து



**கொழும்பு, ஜூலை 20**

**அரசியலின் அனைத்து மட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது ஆளுகைக்கு அர்த்தத்தையும், சமநிலையையும், பன்முகத்தன்மையையும் அளிக்கும். அது பெண்களுக்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்த நாட்டுக்கும் பயனளிக்கக்கூடியதாக அமையும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியிருக்கிறார்.**

கொரோனாவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அடிப்படை வசதிகள் இல்லாமை, தொற்றுநோய்த் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரத்தை வழங்காமை, தான்தோன்றித்தனமாக அரசியல் பரப்புரைக் கூட்டங்களை நடத்துதல் போன்ற காரணங்களை முன்வைத்து நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொரோனா வைரஸ் ஒழிப்பு மற்றும் கட்டுப்பாடு தொடர்பான அனைத்துப் பணிகளிலிருந்தும், அனைத்துப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் விலகினர்.

இதுகுறித்து கரு ஜயசூரிய மேலும் கூறியிருப்பதாவது:

சமூகமட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அர்ப்பணிப்பான சேவை மிக முக்கியமானது. எனவே வைரஸ் பரவல் கட்டுப்படுத்தல் செயற்பாட்டில் முழுமையான வெற்றியைப் பெறுவதற்கு அவர்களின் நேரடியான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது.

பொதுத்தேர்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் தொடர்ச்சியான வலியுறுத்தல்களின் பின்னர் வெளியிடப்பட்டிருக்கிறது.

நாட்டுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உரிய அதிகாரிகள் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளவற்றை முறையாக நடைமுறைப்படுத்துவது முக்கியமானது. என்றார். (கு)



# வலசைப் பறவைகளின் களப் பயணம் வல்லையில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வலசைப் பறவைகளை பார்வையிடும் களப்பயணம் யாழ்ப்பாணம் வல்லையில் நேற்று நடைபெற்றது.

சிறகுகள் அமையம் சுற்றுச்சூழல் பிரிவின் ஏற்பாட்டில் குறித்த களப்பயணத்தை அமையத்தின் அலுவலர் கஜேந்திரன் வழிநடத்தி பங்குகொண்டவர்களுக்கு பறவைகள் தொடர்பிலான விடயங்கள் மற்றும் முக்கியத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இவ்வாறான இயற்கை நேய செயற்பாடுகள், சூழல் மீதான ஈடுபாட்டை அதிகரிப்பதுடன் மட்டுமல்லாது மன அமைதியையும் ஏற்படுத்துவதாக அமைகின்றன.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளில் ஆர்வமூட்ட வேண்டிய தேவை பெற்றோர் மற்றும் கல்விச் சமூகத்துக்கு உண்டு. இதன்மூலமே சூழல் நேயம் சார்ந்தோராக அவர்களை வளர்த்தெடுக்க முடியும் - என்று அவர் தெரிவித்தார். (கு)

# குருணாகல் தவிசாளரை சட்டத்தின் முன் நிறுத்தவும்

## மங்கள ருவிட்டரில் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 20

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்ட விவகாரத்தில் குருணாகல் பிரதேச மேயர் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, காட்டுமிராண்டிகள் தற்போது அதிகார இருக்கைகளிலேயே அமர்ந்திருக்கிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

13 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரிய குருணாகல் இராசதானிக்குச் சொந்தமான இரண்டாம் புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்டமை தொடர்பில் சர்ச்சை எழுந்தநிலையில்,

அதுபற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் செனரத் திஸாநாயக்க தலைமையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் கடந்த வெள்ளிக்கிழமை விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்தநிலையில், புவனேகபாகு மன்னனின் அரச மண்டபம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், இதுவரையில் பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்திருக்கின்றார் என்று இணைய ஊடகமொன்றில் வெளியாகியிருக்கும் செய்தியை மேற்கோள்காட்டி, தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

13 ஆம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரிய மிக முக்கிய தொல்பொருள் சான்றாக விளங்கிவந்த மண்டபம் உடைக்கப்பட்ட விவகாரத்தில் குருணாகல் பிரதேச மேயர் சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும். காட்டுமிராண்டிகள் எவரும் கைதுகளுக்கு வெளியில் இல்லை. மாறாக அவர்கள் அதிகார இருக்கைகளிலேயே அமர்ந்திருக்கிறார்கள், என்றும் குறிப்பிட்டுள்ளார். (கு)



# சட்டவிரோத மரக்குற்றிகளுடன் விபத்துக்குள்ளானது வாகனம்

கிளிநொச்சி, ஜூலை 20

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் 3 லட்சம் ரூபா பெறுமதியான தேக்க மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த மரக்குற்றிகளை ஏற்றியவாறு பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகி நின்றநிலையில் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றள்ளது.

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியிலிருந்து மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனமே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாகனம் மற்றும் ஏற்றி வந்த மரக்குற்றிகளை பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேக நபர்களை அடையாளம் காணும் நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (கு-6)

# துஷ்பிரயோக முயற்சி: இரு சிறுவர்கள் கைது

முல்லைத்தீவு, ஜூலை 20

முல்லைத்தீவு விசுவமடுவின் ஒரு கிராமத்தில் சிறுமியொருத்தியைப் பாலியல் துஸ்பிரயோகம்செய்ய முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் சிறுவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர் என்றும் அதன்போதே இரண்டு சிறுவர்களும் இணைந்து சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவர்கள் அப்படிச் செய்வதைக் கண்டவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினர்.

அங்கு சென்ற பொலிஸார் சிறுவர்கள் இருவரையும் கைதுசெய்தனர். சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

அவர்களில் ஒரு சிறுவனிடம் பெறுமதியான அலைபேசி காணப்பட்டுள்ளது.

கல்வி கற்றலுக்காக சிறுவர்கள் அலைபேசியை வைத்திருந்தனர் என்று கூறப்பட்டது. எனினும், அலைபேசியை சோதனையிட்டபோது, கூகிள் தேடலில் பாலியல் தொடர்பான தேடல்களே அதிகளவில் தேடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-19)

# மக்கள் ஒத்துழைத்தால்தான் கொரோனாவிலிருந்து மீளலாம்

## சுகாதார அமைச்சர் கூறுகின்றார்

மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே கொரோனாத் தொற்றிலிருந்து நாம் மீண்டுவர முடியும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனா உலகளாவிய ரீதியான சவாலாகக் காணப்படுகிறது. எனினும், இதனை எம்மால் கட்டுப்படுத்த முடியுமென்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கொரோனாத் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான 700 பி.சி.ஆர். பரிசோதனைகள் இதுவரை செய்யப்பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைகளின் அடிப்படையில் 443 கைதிகளும் 63 அதிகாரிகளும் அவர்களுடன் தொடர்பில் இருந்த 26 பேரும் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


அதற்கிணங்க மொத்தமாக 532 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த இரண்டரை மாதங்களாக நாட்டில் எந்தவொரு கொரோனாத் தொற்றாளர்களும் அடையாளம் காணப்படாமைக்கு மக்களின் ஒத்துழைப்புத்தான் பிரதான காரணமாகும்.

இந்தவேளையில் நாம் மக்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம். அதாவது, கடந்த காலங்களில் எமக்கு எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினீர்களோ அதேபோல் இனியும் செயற்பட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம், என்று மேலும் தெரிவித்துள்ளார். (கு)









வரலாற்று சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்போற்சவப் பெருவிழாவில் தேர்த்திருவிழா நேற்றுச் சிறப்புற இடம்பெற்றது. (க-222)

# தனியார் பஸ்களின் சேவைகளை 50 வீதமாகக் குறைக்கத் தீர்மானம்



கொழும்பு, ஜூலை 20

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பஸ்களை நாளை செவ்வாய்க்கிழமை முதல் நூற்றுக்கு 50 சத வீதமாகக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மார்ச் மாதம் முதல் சுமார் இரண்டுமாதங்கள் நாடுமுடக்கப்பட்டிருந்தது. இதனால் பொதுப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

சேவையில் ஈடுபடுத்தப்படாமையால் பெருமளவிலான தனியார் பஸ்கள் பழுதடைந்திருந்தன. எனவே நாடு வழமைக்குத் திரும்பிய பின்னர் எமக்கான நிவாரணங்களை வழங்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

எமது எந்தக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை என்பதோடு, எவ்வித நிவாரணங்களும் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

நாடு வழமைக்குத் திரும்பிய பின்னர் பொதுப் போக்குவரத்து ஆரம்பமானபோதிலும், ஆரம்பத்தில் 50 வீதமான பயணிகள் மாத்திரமே பஸ்களில் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், பின்னர் ஆசனங்களுக்கு ஏற்ற பயணிகளை உள்வாங்குவதற்கும் அனுமதியளிக்கப்பட்டது.

இதன் காரணமாக தனியார் பஸ் உரிமையாளர்கள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர். நாடு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் கொரோனா பரவல் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனால் அச்சத்தின் காரணமாக மக்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

எமக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்வதற்கு மாற்று ஏற்பாடுகள் அல்லது நிவா ரணங்கள் எதுவுமே வழங்கப்படாத நிலையிலேயே இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டியேற்பட்டுள்ளது- என்றார்.

(க)

# கொரோனா வைரஸை விட பயங்கரமானோர் பொலிஸார்

*அசேல சம்பத் விசனம்*

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததும் இலங்கை பொலிஸாருக்கு அதிசயமான நோய் தொற்றியுள்ளது. இதனால், கொரோனாவைரஸை விட பொலிஸார் பயங்கரமானவர்களாக மாறியுள்ளனர் என்று பொது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நவம்பர் 16 ஆம் திகதி இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பொலிஸாருக்கு அதிசயமான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இது ஜனாதிபதி வழங்கிய விசேட உத்வேகம் அல்ல. ஜனாதிபதியைச் சுற்றி இருப்பவர்களுக்கு இந்தக் காய்ச்சல் ஏற்பட்டு, அதில் ஒரு பகுதி பொலிஸாருக்கு படிப்படியாக பரவியுள்ளது. கொரோனாவை விட பொலிஸார் பயங்கரமானவர்களாக இருக்கின்றனர்.

கொரோனா ஏற்பட்டால் குணப்படுத்த முடியும். பொலிஸாரிடம் பிடிப்பட்டால் குணப்படுத்த முடியாது. நேரடியாகத் தலையில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுவார்கள். இதுதான் உண்மை.

இங்கு இருக்கும் பிரச்சினைஎன்ன?. பொலிஸாரில் நல்லவர்களும் இருக்கின்றனர்.

மேலும் சிலர் தத்தமது வீட்டில் உள்ளவர்களின் உடைகளைக் கூட போதைப் பொருள் மற்றும் கள்ளச் சாரயம் விற்பனையாளர்களிடம் பெறும்பணத்தில்கொள்வனவுசெய்பவர்கள். நான் கூறுவது பொய் அல்லது இல்லை எனக் கூறுவார்களாக இருந்தால், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன, அஜித் ரோஹன, தேசபந்து தென்னகோன் ஆகியோரை என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அழைக்கின்றேன். நான் சாட்சியங்களுடன் வருவேன்- என்றார். (க)

# ஹிங்குராக்கொடவில் 13 பொலிஸார் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜூலை 20

ஹிங்குரக்கொட தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றும் அனைத்து அதிகாரிகளும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையக் குற்ற விசாரணைப்பிரிவின் 10 ஆண் பொலிஸாரும், மூன்று பெண் பொலிஸாரும் இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ஹிங்குரக்கொட சுகாதார மருத்துவ அதிகாரி பீ.என்.கே. நில்மினி தெரிவித்துள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் கடமையாற்றிய அதிகாரியான ஹிங்குரக்கொட மாரசிங்கவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே இவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

(க)



# ‘அவளுக்கு ஒரு வாக்கு’ விழிப்புணர்வு நாடகம்

கிளிநொச்சி, ஜூலை 20

நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் முகமாக ‘அவளுக்கு ஒரு வாக்கு’ எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் பல மாவட்டங்களிலும் குறித்த வீதி நாடகத்தை நடத்திவருகிறது. அந்த வகையில் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் தண்ணீரூற்றிலும் நேற்றுமுன்தினம் முற்பகல் 9:30 மணியளவில் கிளிநொச்சி நகரத்திலும் மாலை 4 மணிக்கு பரந்தன் சந்தியிலும் இந்த விழிப்புணர்வு நாடகம் நடத்தப்பட்டது. (து)



மன்னார் இரட்டை மாட்டு வண்டிச் சவாரி சங்கத்தின் அனுசரணையில், கற்கடந்தகுளம் கிராம மக்களின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இரட்டை மாட்டுவண்டி சவாரிப் போட்டி இடம்பெற்றது. போட்டியில் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 25 சோடி காளைகள் பங்குபற்றின. (சு-56)

# நெற்செய்கையில் கபில நிற தத்திகள்

## விவசாயிகளுக்கு நஷ்டம்

மட்டக்களப்பு, ஜூலை 20

வாழைச்சேனை கமநல சேவை திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் கபில நிற தாவரத் தத்திகள் (அறக்கொட்டி) பரவியுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கபில நிறத் தாவரத் தத்திகள் (அறக்கொட்டி) நெற் பயிரில் கதிர்வரும் வேளையில் பரவியுள்ளதால் நெற்கதிர்கள் பதராகிப் போவதுடன் பயிர்களும் நிலத்தில் விழுந்து காணப் படுகின்றன.


இது தொடர்பாக வாழைச் சேனை கமநல சேவை திணைக் களத்திடம் முறையிட்டதன் பேரில் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட மருந்துகளைத் தெளித்தும் கபில நிற தாவரத் தத்திகள் (அறக்கொட்டி) அழியவில்லை.

எனவே கபில நிற தாவரத் தத்திகளால் (அறக்கொட்டி) பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு-150)

# பைகளில் கட்டப்பட்ட 80 லீற்றர் கசிப்பு மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 20

**புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராறு கள்ளியடி காட்டுப்பகுதியில் பொலித்தீன் பைகளில் கட்டப்பட்டிருந்த ஒரு தொகை கசிப்பு மீட்கப்பட்டது.**



குறித்ததொரு இடத்தில் சட்ட விரோத மதுபான விற்பனை இடம் பெற்றுவருவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, ஜ.பி.பண்டார தலைமையிலான, குழுவினர்

நேற்று முன்தினம் சுற்றி வளைப்பில் ஈடுபட்டனர்.

கள்ளியடி ஆற்றுப்பகுதியில், கசிப்பு முகவர்களுக்கு விற்பனை செய்யத் தயாரான நிலையில் ஒவ்வொன்றும் 10 லீற்றர் வீதம் பைகளில் கட்டப்பட்ட 8 பைகள் மற்றும் உந்துருளி என்பவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப் பட்டனர்.

இருவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்கள் கசிப்பு விற்பனை செய்வதாக ஒப்புக் கொண்டதையடுத்து இருவரையும் பிணையில் விடுவித்த நீதிமன்றம், வழக்கை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (சு-19)



# சட்ட விரோத மணல் அகழ்வு இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 20

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட அவர்களிடமிருந்து குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த வேளை இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரும் கடும் நிபந்தனைகளுடன் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (சு-113)

## வீட்டிலிருந்து மீட்கப்பட்ட 19 நாகபாம்புக் குட்டிகள்

கொழும்பு, ஜூலை 20

கட்டுகஸ்தோட்ட உடுவாவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்த 19 நாகபாம்புக் குட்டிகளுடன் பெரிய நாகம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் கட்டுமானப் பணிகளின் போது, நாக பாம்புக் குட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று வீட்டின்

உரிமையாளர் தெரிவித்தார்.

விலங்குகளைத் துன்புறுத்தாத வகையில் அவைகள் பிடிக்கப்பட்டு வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (சு)

# திருடிய பிள்ளையாரை மீண்டும் வைத்த நபர்



ஹற்றன், ஜூலை 20

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து பிள்ளையார் சிலையை திருடிய நபர் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமரா மூலம் அடையாளம் காணப்பட்டார்.

சொகுசு காரில் வந்த இளைஞர் ஒருவரால் திருடப்பட்ட சிலை, மூன்று நிமிடத்தில் மீண்டும் அந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்று திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் முன்புறம் இருந்த பிள்ளையார் சிலையை காலையில் பார்த்தபோது, அது இருந்த இடத்திலிருந்து வேறொரு இடத்தில் வைக்கப்பட்டு இருப்பதைக் கண்டு சி.சி.ரி.வி.கமரா வைப் பரிசோதித்துள்ளனர்.

இதன்போது நபரொருவர் சொகுசு காரில் வந்து பிள்ளையார் சிலையைத் திருடிச் செல்வதும், மூன்று நிமிடங்களின் பின்னர் அதனை மீண்டும் கொண்டு வந்து வைப்பதும் கமராவில் பதிவாகியுள்ளது. (சு)

# 22 தேக்கு மரக்குற்றிகள் பொலிஸாரால் பறிமுதல்



மட்டக்களப்பு, ஜூலை 20

சட்டவிரோதமான முறையில் வியாபாரத்துக்காகக் கொண்டுசெல்லப்பட்ட தேக்கு மரக்குற்றிகள் வாகனத்துடன் கைப்பற்றப்பட்டன.

ஓட்டமாவடி பிரதேசத்தில் வைத்து, வாழைச் சேனை பொலிஸார், மரக்குற்றிகளைக் கைப் பற்றினர்.

22 தேக்கு மரக் குற்றிகள் சிறியரக வாகனத்தில் கடத்தப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (சு)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் மங்கையர்க்கரசி



தம்மளை, கந்தரோடை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மங்கையர்க்கரசி நேற்று (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் ரவீந்திரன், பாலச்சந்திரன், பாலகௌரி, (ஆசிரியை, யாழ்/ சங்குவேலி அ.த.க.பாடசாலை), மனோகரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பூபதீஸ்வரி (மருத்துவர் , யாழ்/ கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை), பாலநந்தினி, முருகதாஸ் (பாடசாலைப் பணியாளர் யாழ்/ ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை), சசிதரன் ஆகியோரின் மாமியாரும் சிவானி, ஆரணி (மாணவி யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரி) யதுர்ஷன் (மாணவன் யாழ்/ அளவெட்டி அருணோதயக் கல்லூரி) கபீர்த்தனா, (மாணவி யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரி) சுகர்ணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை கந்தரோடை சங்கம் புலவு இந்துமயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.


தம்மளை, கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

தகவல்:- குடும்பத்தினர், (0776224599, 0212240971)

## மரண அறிவித்தல்

### நாகமணி நடராசா

(ஓய்வுபெற்ற கணக்காளர்- கரைச்சி வடக்கு பரந்தன் ப.நோ.கூட்டுறவுச் சங்கம்)



வையத்துள் தழந்தையாய் தெய்வத்துள் தீபமாய்
04.07.1933 18.07.2020

யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டை, அரியாலை, வத்தளை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி நடராசா 18.07.2020 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார்.காலஞ்சென்றவர்ளான நாகமணி - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புங்குடுதீவைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை - யோகாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், மரகத வல்லி அவர்களின் ஆருயிர்க் கணவரும்.சுந்தரராசா (பிரான்ஸ்), தங்கராணி (முன்னாள் ஆசிரியை - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, ஜேர்மனி), தர்ஷனி (கனடா), தர்ஷிகா(கட்டடப்பட வரைஞர்- கொழும்பு), இரவீந்திரராசா (U.K), Dr.குகானந்தராசா (கொழும்பு), திலகராசா (U.K), ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பண்டிதர் கந்தையா, வேலாயுதம்பிள்ளை (வர்த்தகர்), சேதுப்பிள்ளை, மாணிக்கம் மார்க்கண்டு (நிலவளவையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயஜினி (பிரான்ஸ்), யோகரட்ணம் (ஜேர்மனி), தவராசா(கனடா), ராதிகா (U.K), Dr.பிரதீபா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, பத்மநாதன், மங்கயற்கரசி, மகேஸ்வரி மற்றும் இலங்கநாதன், மங்களாம்பாள், பர்வதபத்தினி, காலஞ்சென்றவர்களான ஸ்ரீபத்மா, கமலா, புண்ணிய மூர்த்திமற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதீஸா, சதீஸ், சகிதன், சனோஜா, அபிநயா, அபிந்தா, அபிஷ்னா, அக்ஷிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கொழும்பு ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுள்ளவும்.

Dr.குகானந்தராசா (மகன் - 0094 775 436 463)
தர்ஷிகா (மகள் - 0094 779 904 962

தகவல்: குடும்பத்தினர்.

# பேரினவாத அடக்குமுறையை கூட்டமைப்பாலேயே தடுக்கலாம்

செங்கலடி, ஜுலை 20

தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத அரச அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மாத்திரமே முடியும் என்று அந்தக் கட்சியின் மட்டக்களப்பு வேட்பாளர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் அனைவரும் தங்களுக்கிடையிலான உள் முரண்பாடுகளைக் கைவிட்டு ஒற்றுமையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து நாடாளுமன்றில் தனித்துவத்தை நிலைநாட்ட வேண்டும்.

தற்போதைய அரசியல் கள நிலவரங்களையும் தமிழர்சார் அரசின் கொள்கைகளையும் ஒவ்வொரு தமிழரும் புரிந்துகொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

த.தே.கூட்டமைப்பு தவிர்ந்த கட்சிகள் மாயையான தோற்றப்பாடுகளை தமிழ் இளைஞர்கள் மத்தியில் தோற்றுவித்து அவர்களை ஏமாற்றப் பார்க்கின்றன. இந்த ஏமாற்று வித்தைகளை இளைய சமுதாயத்தினர் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (த)

# இனப்பரம்பலை மாற்றியமைக்கவே வன்னியில் 405 வேட்பாளர்கள்

### *கூறுகின்றார் கூட்டமைப்பின் சத்தியலிங்கம்*

வவுனியா, ஜுலை 20

வன்னியில் இனப்பரம்பலை இலகுவாக மாற்றியமைப்பதற்கு சிங்களப்பிரதிநிதிகள் நிச்சயம்தேவை. அதற்காகவே 405 வேட்பாளர்கள் களம் இறக்கபட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற தேர்தல்வேட்பாளருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா பூந்தோட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமகாலஅரசியல் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்தின் செட்டிகுளம் பகுதியின் கீழ்மல்வத்தோயா திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் செட்டிகுளம் மற்றும் மன்னார் பிரதேசம் பெரு நன்மைகளைப் பெறக்கூடியதாக இருந்தாலும் மறுபுறத்தில் அது வவுனியா மாவட்டத்தின் இனம்பரம்பலை மாற்றியமைப்பதற்கான மறைமுகமான செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டது. அதை தடுத்து நிறுத்தியுள்ளோம்.

வவுனியா வடக்கில் கல்லாறு என்ற ஆற்றுக்கு 'கிபிள்ஓயா' என்று பெயர் மாற்றி 'கிபிள்ஓயா நீர்ப்பாசனத்திட்டம்' என்ற ஒரு செயற்றிட்டத்தை கொண்டுவருவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.


இதன்மூலம்18 ஆயிரம்விவசாயக் குடும்பங்களை குடியேற்றவேண்டும் என்று அந்தத் திட்டத்தில் முன்மொழி வுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த 18ஆயிரம் குடும்பங்கள் எந்த இனத்தவர்கள் என்பதே கேள்விக்குறியான விடயமாகவுள்ளது. அந்தப் பகுதியில் தற்போது மீள்குடியேறியுள்ள தமிழர்கள், தமது சொந்த நிலங்களை துப்புரவு செய்யமுடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ள அரசு, அங்கு யாரைக்குடியேற்றும் என்பது சந்தேகத்திற்குரியதே.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் மற்றும் கருநாட்டங்கேணி பகுதிகளில் போரால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகள் 'மகாவலி எல்' வலயத்துள் உள்ளீர்க்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு அந்த காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. - என்றார். (த-110)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சிவராசா



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சிட்னி ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவராசா 03.07.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், சிவராசா காலஞ்சென்ற நாகபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும், மீனாவின் அன்புக் கணவரும், றஜீவின் பாசமிகு தந்தையும், சிவாந்தினி அவர்களின் அன்பு மாமனும், Traveen, Milana ஆகியோரின் பாசமிகு பேரனும், லோகேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற சாந்தி (கனடா), கிருபாகரன் (கனடா), சர்வானந்தன் (ஆஸ்திரேலியா), நித்தியானந்தன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவானந்தன் (லண்டன்), சிவோதயன் (ஐக்கிய அமெரிக்கா), சிவநாதன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.07.2020 முற்பகல் 10 மணிக்கு Rookwood Memoria gardens and Crematorion Memorial Ave, Rookwood NSW 2141, Australia இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மீசாலை

சர்வேஸ்வரன் குடும்பம்

(cs.32953) (13.17)

# முஸ்லிம்களுக்கு எதிராக தெற்கில் இனவாதம்

### *ஐ.ம.ச.யின் அப்துல்லா மஃறூப் விரக்தி*

கொழும்பு, ஜுலை 20

தெற்கில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்கி தேர்தல் காலங்களில் வாக்குகளுக்காக செயற்படுகிறார்கள். இதன் ஊடாக நாடாளுமன்றில் பெரும்பான்மையை பெற முயற்சிக்கின்றார்கள் என்று முன்னாள் பிரதியமைச்சரும், திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளருமான அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

கிண்ணியா மாஞ்சோலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களுடைய ஜனாசாக்களை கொரோனா என்ற போர்வையில் எரித்தார்கள். உலக சுகாதார ஸ்தாபனம் கூறிய போதிலும் இந்த நாட்டு ஜனாதிபதிஅதனை ஏற்கவில்லை. ஏன் மறுத்தார்? நிலையியல் கட்டளைச் சட்டம் கூட தெரியாதவர்களே நாட்டின் தலைவனாக இருப்பது பெரும் கேள்விக்குறியாய் உள்ளது. முஸ்லிம் சமூகம், குர் ஆன், ஹதீஸ் அடிப்படையில் ஷரீஆ சட்டங்களை பின்பற்றி வாழ்கின்ற சமூக கட்டமைப்பைக் கொண்டது. அச்சமூகச் சட்டங்களை, விவாக சட்ட மூலத்தை மாற்றுவதற்கு அத்துரலிய போன்றோர்கள் முற்படுகிறார்கள். இதைச் செய்வதற்கு இவர்களுக்கு என்ன உரிமையுண்டு? திருகோணமலையில் மொட்டுக் கட்சியில் கோடரிக் காம்புகள் களமிறக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வாக்களித்தால் அது இனவாதிகளின் கையை ஓங்கச் செய்யும். சிறுபான்மை இனத்துக்குச் சொந்தமான நிலங்களை கபளீகரம் செய்யவும் நாட்டை துண்டாடவும் அவர்கள் நினைக்கிறார்கள் - என்றார். (த)

# மஞ்சள் தூளில் கலப்படங்கள்

## நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 20
தற்போது விற்பனை நிலையங்களில் விற்பனைசெய்யப்படும் மஞ்சள் தூளில் பல்வேறு கலப்படப் பொருள்கள் கலக்கப்பட்டு உள்ளதாக பொதுமக்களுக்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது. நுகர்வோர் பெற்றுக் கொள்ளும் மஞ்சள் தூளில் பல்வேறு கலப்படங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய, விற்பனை நிலையங்களை திடீர் சோதனையிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



வர்த்தக நிலையங்களில் சோதனைகளின் போது கிடைக்கப்பெற்ற மஞ்சள் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் இயக்குநர் அசேல பண்டார தெரி வித்துள்ளார். மேலும் மோசடியான வர்த்தகர்கள் தொடர்பான தகவல் வழங்குவதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபையினால் தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 1977 என்ற இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை வழங்க முடியும்.

கொழும்பு யோன் வீதிக்கு அருகிலுள்ள இடம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியான தரமற்ற மஞ்சள் தூள் கைப்பற்றப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ரி2)

# முகக் கவசம் அணியாதோருக்கு எதிராக வழக்கு!

புத்தளம், ஜூலை 20
நாத்தாண்டிய, கொட்டராமுல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் முகக்கவசம் அணியாமல் பயணித்த 10 பேருக்கு எதிராக மாரவில மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாத்தாண்டிய - கொட்டாரமுல்ல பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான இளைஞர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

25 வயதுடைய அவர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஆலோசகராகச் செயற்பட்டுள்ளார்.

அவர் அடையாளம் காணப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து அவரது தந்தை மற்றும் மகன் கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறித்த பகுதி சுகாதார பரிசோதகர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அந்தப் பிரதேசத்தில் மேலும் 10 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேர் சுயதனிமைப்ப டுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஆபத்தான நிலையில் அனைவரும் முகக் கவசம் அணிவது கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதனைக் கருத்திற்கொள்ளாமல், குறித்த பகுதியில் முகக் கவசம் அணியாமல் பய்ணித்த 10 பேருக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# ஆடையின்றி குளித்தோர் வேலையை இழந்தனர்

கொழும்பு, ஜூலை 20
ஆற்றில் ஆடையின்றி குளித்து, கிராமவாசிகளுடன் மோதலை ஏற்படுத்திக்கொண்ட தேர்தல் முறைப்பாட்டு பிரிவில் கடமையாற்றிய அனைத்து அதிகாரிகளையும் பணியில் இருந்து இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பின்னர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக பொலநறுவை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி டி.ஏ. தர்மசிறி தெரிவித்துள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது:

தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த 7 அதிகாரிகள் கலஹகல பிரதேசத்தில் உள்ள ஆற்றுக்கு குளிக்கச் சென்றுள்ளனர். பின்னர் அவர்கள் மதுபானம் அருந்திய நிலையில் ஆடையின்றி ஆற்றில் குளித்துக்கொண்டிருந்துள்ளனர். அதன்போது, கிராமவாசிகள் சிலர் வந்து அதற்கு எதிர்ப்பை வெளியிட்டதால், இருதரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. கிராமவாசிகள் அதிகாரிகளைத் தாக்கி, அவர்களைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். குறித்த அதிகாரிகளில் ஒருவர், கிராமவாசிகளுடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரி1)

ஹோமாகம

# பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு தொற்றில்லை

கொழும்பு, ஜூலை 20
ஹபரதுவ தனிமைப்படுத்தல் மையத்துக்கு அழைத்து வரப்பட்ட ஹோமாகம பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் 14 பேருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு காலி கராபிட்டி மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில், குறித்த அனைவருக்கும் தொற்று ஏற்படவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (ரி2)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** அரியாலை கிழக்கு, நாவலடி பிரதேசம், பூம்புகார் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்**
கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, நெளுக்குளத் திலிருந்து உளுக்குளம் வரை, கூமாங்குளத்திலிருந்து அவுசதாப்பிட்டிய வரை, பத்தினியார் மகிழங்குளம் கிராமம், கிறிஸ்தவகுளம், புளியங்குளம் ஆகிய பிரதேசங்களி லும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.



# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். வியாபாரத்தில் பணவரவு எதிர்பார்த்தபடி அதிகரிக்கும். நண்பர்களிடம் கடந்தகால நினைவுகளை கூறி மகிழ்ச்சி கொள்வீர்கள். பெண்களுக்கு பேச்சில் நிதானம் தேவை.

**இடபம்:** உத்தியோகத்தர்களுக்கு புதிதாக தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். வியாபாரத்திலிருந்த தேக்க நிலை மாறும்.

**மிதுனம்:** மனதில் நினைப்பதை வெளிப்படையாக மற்றவர்களிடம் கூறுவீர்கள். நண்பர்களிடம் குடும்ப விஷயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம்உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் ஏற்படும் பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள். சொத்து வாங்கும் போது கவனத்துடன் ஆராய்ந்து வாங்குங்கள். சுபச்செலவுகள் உண்டு. தொழிலில் முன்னேற்றமும், லாபமும் உண்டாகும்.

**சிம்மம்:** திட்டமிட்ட சுபநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும். வெளிநாட்டு உத்யோகத்திற்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி உண்டு.

**கன்னி:** செலவுகளை குறைத்து சேமிக்க தொடங்குவீர்கள். பெண்களுக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கியமானவர்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**துலாம்:** கடந்த நாட்களில் இருந்த சோகம் தீரும். அலுவலகத்தில் நிலுவைப் பணிகளை முடிப்பீர்கள். பணப் பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த சில நன்மைகள் தள்ளிப் போவதால் குழப்பம் ஏற்படும். அலுவலகத்தில் எந்த வம்பிலும் சிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருங்கள்.

**தனுசு:** வீண் செலவுகளை குறைப்பது நல்லது. பெண்களுக்கு உணவுக் கட்டுப்பாடு அவசியம் தேவை. வியா பாரத்தில் லாபமீட்டப் போராடுவீர்கள்.

**மகரம்:** உழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தில் சில முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**கும்பம்:** நிலுவைப் பணிகளை முடிப்பதற்கு மேலதிகாரி உங்களுக்கு உதவிகரமாக இருப்பார். புதிய முயற்சியை மேற்கொண்டு லாபத்தை பெருக்குவீர்கள்.

**மீனம்:** பெண்களின் உடல்நிலை சீராகும். உறவினர்களின் மூலம் உதவிகள் கிடைக்கும். அலுவலக நண்பரிடம் இருந்து பணியில் உள்ள நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

# கல்வியில் சிறந்த வட மாகாணம் பெருமையை இழந்துவிட்டது

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**கல்வியில் சிறந்து விளங்கிய வடக்கு மாகாணம் அதன் பெருமையை தற்போது இழந்துள்ளது. அப்பெருமையை மீண்டும் நாம் பெற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

யாழ்.சென்.ஜோன்பொஸ்கோ வித்தியாலம், மயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாலயம், மானிப்பாய் புனித அன்னாள் றோ.க.த.க. பாடசாலை மற்றும் வயாவிளான் றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலை களில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட கட்டடத்தொகுதிகளை நேற்று முன்தினம் திறந்து வைத்து வைத்து உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



மாணவர்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. மாணவர்கள் ஏன் சீரழிந்து போகிறார்கள்? சமுதாயம் ஏன் சீரழிந்து போகின்றது? போன்ற கேள்விகளுக்கான பதில் ஆசிரியர்களிடமே உள்ளது. உயிர் உள்ள வளங்களாகவே நான் மாணவர்களைப் பார்க்கின்றேன்.

எமது மாகாணத்தில் சமூகப்பிறழ் வுகள் உட்பட முறையற்ற பல புதிய விடயங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் வறுமையென்று சொல்லப்பட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கட்டடங்கள் கட்டுவதால் மட்டும் கல்வித்துறை முன்னேறும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. வசதிகள் மட்டும் வடக்கின் கல்விப் புலமைக்கு முக்கியமானதாக இருக்க முடியாது. வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு பௌதீக வளங்கள் தாராளமாகச் செய்யப்பட்டுள்ளன. வயாவிளான் என்ற பழம்பெரும் கிராமத்தில் போரின் காரணமான இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. அதன் பின்னர் இக்கிராமத்தின் இன்றைய நிலையை எண்ணி நான் வேதனையடைகின்றேன். காணிகளை விடுவிக்க நாங்கள் பலமுறை முயன்ற போது மக்கள் மீள்குடியேறத் தயாராகஇருக்க வில்லை. வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களிடம் இங்கு ஒருமுறையாவது வந்து அவர்களின் காணிகளை சீரமைத்து இங்கிருக்கும் தமது உறவினர்களிடமாவது தற்காலிகமாக ஒப்படைக்கச் செல்லுங்கள் என்றே இராணுவ அதிகாரிகள் கூறுகி றார்கள். ஆகவே எஞ்சி யுள்ள காணிகளை விடுவித்து மக்கள் மீளக்குடி யேறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குங்கள் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

## அடிகாயங்களுடன் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 19

கொஸ்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பான்வெல்துவ, சுதுவெலிபொத வீதிக்கு அருகில் முகத்தில் அடிகாயங்களுடன் சடலமொன்று மீட்கப்ப ட்டுள்ளது. போகஹவெல, ஊரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய குடும்பஸ்த ரொ ருரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி1)

## மின் தாக்கி இளைஞர் பலி

கண்டி, அலவதுகொட, வலஹேன கிராமத்தில் நேற்றுமுன்தினம் மின்சாரம் தாக் கியதில் இளைஞர் ஒரு வர் உயிரிழந்துள்ளார். உமர் நிஸ்தார் என்ற குறித்த நபர் நேற்று ஏற்பாடாகியிருந்த தனது சகோதரனின் திருமண நிகழ்வை யொட்டி, வீட்டின் வெளிப்பகுதிக்கு மின் விளக்குகளைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே இவ் வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## முட்டையின் விலை அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் நாட்களில் கோழி முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும் என இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோழித் தீவனத்திற்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் சுபசிங்க தெரிவித்துள்ளார். மேலும் நட்டமின்றி கோழி முட்டையை விற்பனை செய்ய வேண்டுமாயின் அதன் விலையை 20 ரூபா வரையில் அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, கோழித் தீவனத்தின் பற் றாக்குறை காரணமாக கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கவும் வாய்ப்புக்கள் உள்ள தா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## செனிடைசருக்கு மட்டும் ஒரு கோடியே 20 லட்சம்!

கொழும்பு, ஜூலை 20

பொதுத்தேர்தலில் கைகளைத் தொற்று நீக்கும் செனிடைசர் திரவத்துக்காக தேர்தல் ஆணைக்குழு ஒரு கோடியே 20 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை செலவிட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வாக்காளர் 15 மில்லிலீற்றர் செனிடைசரைப் பயன்படுத்துவார் எனவும் ஒரு வாக்காளர் பயன்ப டுத்தும் செனிடைசருக்கு ஒரு ரூபாய் செலவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி1)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் கலைப் பீடத்தின் நுண்கலைத் துறையில் நாடகமும் அரங்கியலும் பாட சிரேஸ்ட விரிவுரையாளருமான **கலாநிதி திருமதி நவதர்சினி கருணாகரன்** அவர்களது அன்புத் தாயாரான

**திருமதி திருத்தணிகை நவரத்தினம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்கள் கடந்த 18.07.2020 சனிக்கிழமை இறைபதம் எய்தினார் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை இல : 8/2 கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், என்ற முகவரியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**J.S.சத்தியநாதன்**
(ஓய்வுபெற்ற கணக்குப்பதிவாளர். பனை அபிவிருத்திச் சபை)



எங்கள் குடும்பங்களின் ஒளிவிளக்காக
கர்த்தரின் போதனையின்பால்
வாழ்ந்தவரே
நாமும் அதுபோல இவ்வுலகில் வாழ
பத்தொன்பதாவது ஆண்டின் நினைவு - நாளில்
வந்தொருமுறை தரிசனம் தாரும்
அப்பப்பாவே!

தோற்றம் 29.05.1944
மறைவு 20.07.2001

பேரப்பிள்ளைகள் -
ச.யோன் மிருதுளன், ச.யோன் மிருனாளன்
மடத்துக்கடவை, அல்வாய் மேற்கு,
அல்வாய். 077 662 4408

## 05ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**புவனேஸ்வரி சீவகாருணியம்**
திதி: அமாவாசை

பிறப்பு 13.11.1932
இறப்பு 14.08.2015

மடிச்சிறகில் காத்து எனை
வளர்த்தாய் தாயே
உனை இழந்து நாம் அநாதியாய்
உணர்கின்றோம் தாயே
மீண்டும் எம் மடியில் தவழ நீர்
வாரீரோ "பேத்தி" எனும் உறவில்...
அம்மாவே தினமும் உனை எண்ணி
விழி நீர் சொரிகின்றோம்.

**அன்புக் கணவர், மகள், பேரப்பிள்ளைகள்**

## முதலாம் ஆண்டு நினைவுநாள்



**ஐயாத்துரை பாலசிங்கம்**
இறப்பு: 31.07.2019
திதி: அமாவாசை (ஆடி)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப்போனது எங்கள் தெய்வமே!
எங்கள் உள்ளே என்றும்
உயிர் வாழ்வீர்கள் அப்பா!
உங்கள் இனிய நினைவுகளும்
உங்களை இழந்த வலியும், வேதனையும்
இறுதி மூச்சு உள்ளவரை எம்முள் சுமப்போம்
உங்கள் சிரிப்பை இனி எப்போது
நாம் ரசிப்போம் அப்பா....

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.07.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

**அழைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்**

30/22 A, பிரதேச செயலக வீதி,
சுன்னாகம். (CS.32561) (13.17)
குடும்பத்தினர்.
077 453 0906

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 5


### பகுதி– I

திருமதி எஸ்.செல்வநாயகி
ஆசிரியர்


நேரம்: 45 நிமிடம் பெயர்: ............................... . பாடசாலை: ..................................................

01. உருக்களின் இயல்புகளுக்கு அமைவாக வகைப்படுத்தக் கூடியவை








02. வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.





03. முதலில் தரப்பட்ட உருவுக்கு ஒத்த உருவைத் தெரிவு செய்க




04.





05.




06. யானைக் கூட்டம் ஒன்றிலுள்ள யானைகளின் செவிகளினதும் பாதங்களினதும் எண்ணிக்கை 90 எனின் கூட்டத்திலுள்ள யானைகளின் எண்ணிக்கை

1.12 2. 15 3. 9

07.




2,6 ஆகிய எண்களுக்கு எதிரே உள்ள எண்கள் முறையே
1. 1, 5 2. 5,1 3. 4,3

8. ஒரு பாத்திரத்தில் 3.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்திலுள்ள துளையினூடாக ஒவ்வொரு நிமிடமும் 70 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது எனின் பாத்திரத்திலுள்ள நீர் முழுமையாக வெளியேறுவதற்கு எடுக்கும் நேரம் நிமிடங்களில்

1. 50 2. 35 3. 70

09. சபானா காலையில் துயிலெழுந்து தனது காலைக் கடமைகளை நிறைவு செய்து கொள்வதற்கு 30 நிமிடங்களையும் காலை உணவை உட்கொள்வதற்கு 15 நிமிடங்களையும் பாடசாலைப் பேருந்தில் 1 மணி 15 நிமிடங்களையும் செலவு செய்து காலை 7.15 மணிக்கு பாடசாலையை அடைந்தாள். சபானா காலையில் பாடசாலை செல்லும்வரை செலவு செய்த நேரம் நிமிடங்களில்

1. 2 மணித்தியாலங்கள் 2. 120 நிமிடங்கள் 3. 7.15 மணி

10. கீழே தரப்பட்டுள்ள எண்களில் மூன்றை நீக்கினால் ஒரு கோலம் உருவாகும். நீக்கப்பட வேண்டிய 3 எண்களும் எவை?


86, 87, 88, 89, 90, 92, 94, 95, 96, 98


1. 87, 88, 90 2. 87,89, 95 3. 95, 96, 98

11. 20 மாணவர்கள் விழா ஒன்றில் மகிழ்ச்சியுடன் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டனர். இங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?

1. 40 2. 190 3. 28

12. குறியீடுகளை அவதானித்து விடை எழுதுக




1. திங்கள், தங்கம் 2. தங்கம் திங்கள் 3. சங்கம், தங்கள்

13. கம்பி ஒன்றின் நீளம் 72m ஆகும். அக்கம்பியானது இரு துண்டுகளாக நறுக்கப்பட்டது. ஒரு துண்டு மற்றைய துண்டிலும் இருமடங்கு நீளம் கூடியது எனின் நீளம் கூடிய, நீளம் குறைந்த கம்பித் துண்டுகளின் நீளங்கள் முறையே.

1. 32m,40m 2. 50m 12m 3. 48m, 24m

14. 1 தொடக்கம் 20 வரையான எண்களைத் தொடரொழுங்கில் எழுதும்போது ஒன்று எனும் இலக்கம் எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

1. 12 2. 10 3. 11

15. 30 தொடக்கம் 100 வரையான எண்களில் 3,5 ஆகிய இலக்கங்களினால் மீதியின்றி வகுபடக் கூடிய எண்கள் எத்தனை?
1. 7 2. 5 3. 15

16. பெட்டி ஒன்றினுள் 4 மஞ்சள் நிறமாபிள்களும் 6 பச்சை நிற மாபிள்களும் 5 நீல நிற மாபிள்களும் உள்ளன. நிச்சயமாகப் பச்சை மாபிள் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு மாபிள்களை எத்தனை தடவைகள் எடுத்தல் வேண்டும்.
1. 9 2. 10 3. 11


17. 6 பிள்ளைகளுக்கும் வயது வந்தவர்கள் 4 பேருக்கும் வழங்குவதற்கு 1.5 லீற்றர் குளிர்பானம் தேவைப்பட்டது. இதற்கேற்ப 18 பிள்ளைகளுக்கும் வயது வந்தவர்கள் 22 பேருக்கும் வழங்குவதற்குத் தேவையான குளிர்பானத்தின் அளவு

1. 5 லீற்றர் 2. 6லீற்றர் 3. 4லீற்றர்

18. சங்கமம் எனும் சொல்லில் இடம்பெற்றுள்ள ஒரு சொல்லுடன் தொடர்புடைய பண்டிகை.
1. புத்தாண்டு 2. தைப்பொங்கல் 3. தீபாவளி

**மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

19. பல வடிவங்களில் உண்டு; முட்கள் உண்டு; காலத்துடன் தொடர்புடையது



20. கட்புலசாதனம்; அச்சு ஊடகம்; தினசரி வெளிவருவது

1. 

2. 

3. 

தரப்பட்டுள்ள உருவுக்குப் பொருத்தமான சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

21.



1. இயற்கை, ஊடகம், கட்புலசாதனம்
2. இலத்திரனியல், கட்புலசெவிப்புலசாதனம், நேரடித்தகவல்
3. அச்சு ஊடகம், கட்புலசாதனம், காட்சிகள்

22.




1. நூல்கள், ஆரவாரம், அறிவு
2. அமைதி, வாசிப்பு, அறிவு
3. புத்தகங்கள், பாடசாலை, வீடு

23. பின்வரும் பழமொழி உணர்த்தும் கருத்தினை தெரிவு செய்க.

ஆழமறியாமல் காலை விடாதே


1. எதையும் அளவோடு செய்ய வேண்டும்.
2. எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.
3. குளத்தின் ஆழத்தை அறிந்து காலை விடுதல் வேண்டும்.




உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழுமை ஒன்றின்


1. கால் பங்கு 2. முக்கால்பங்கு 3. அரைப்பங்கு


25. கோலத்தில் அடுத்து வரவேண்டியதை தெரிவு செய்து கோடிடுக.



…………, …………

1. 


2. 

3. 

26. லீப் வருடம் ஒன்றில் உள்ள நாட்களின் எண்ணிக்கை

1. 360 2. 366 3. 365


27.



உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?

1. 04 2. 20 3. 08

28.




1. 66 2. 90 3. 72

29. ஒரு பண்ணையிலுள்ள பசுக்களினதும் கோழிகளினதும் மொத்த எண்ணிக்கை 25 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 76 ஆகும். பண்ணையிலுள்ள பசுக்கள், கோழிகளின் கால்களின் எண்ணிக்கைகள் முறையே

1. 12, 52 2. 15,34 3.52, 24


30. 180m நீளமான சதுர வடிவக் காணிக்கு 4m இடைவெளியில் தூண்கள் நாட்ட வேண்டியுள்ளது எனின் தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?

1. 40 2. 45 3. 32


31. தரணிடம் 15cm நீளமான 25 குச்சிகள் உள்ளன. அவன் இக்குச்சிகளைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சதுரங்கள், முக்கோணிகளின் எண்ணிக்கை முறையே


1. 3,2 2. 2, 3 3. 4,3

32. உருவை அவதானித்து A,B ஆகிய இடங்களில் வரவேண்டிய எண்கள் முறையே




1. 8,4 2.2,8 3. 6,4




33. A, B, தட்டுக்களின் நிறை ஒன்றுக்கொன்று சமன். இரு தட்டுக்களிலும் உள்ள பொருட்களின் மொத்த நிறை 34kg  ஒன்றின் நிறை 5kg எனின்  இன் நிறை எத்தனை kg?

1. 4kg 2. 10kg 3. 7kg

34. 1 தொடக்கம் 50 வரையான எண்களின் கூட்டுத் தொகை

1. 51 2. 1275 3. 151

35. ஒரு வரிசையில் நீலம், சிவப்பு, பச்சை, ஊதா நிறக்கொடிகள் முறையே நடப்பட்டுள்ளன. இதில் 36 ஆவது கொடியின் நிறம் 42ஆவது கொடியின் நிறம் என்பன முறையே.

1. சிவப்பு, ஊதா 2. பச்சை, நீலம் 3. ஊதா, சிவப்பு

36. P,Q ஆகிய இரு நகரங்களுக்கிடையிலான தூரம் 20km ஆகும். சமன் நகரம் P யிலிருந்து புறப்பட்டு மணிக்கு 3km வேகத்தில் நகரம் Q வை நோக்கும் சுமன் நகரம் Q இலிருந்து புறப்பட்டு மணிக்கு 2KM வேகத்தில் நகரம் P யை நோக்கியும் பயணிக்கின்றனர். இவர்கள் இருவரும் தமது பயணத்தைக் காலை 7.00 மணிக்கு ஆரம்பித்தனர் எனின் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் நேரம் எத்தனை மணி

1. மு.ப. 9மணி 2. மு.ப. 11மணி 3. பி.ப. 2 மணி

37. AC, DF, GI, JL …………, ………… வெற்றிடத்தில் வரவேண்டிய எழுத்துக்கள்

1. HI BC 2. PQ, MO 3. MO, PQ

38. பாமினியின் கடிகாரம் சரியான நேரத்திலிருந்து 25 நிமிடங்கள் பிந்திய நேரத்தைக் காட்டுகின்றது. பாமினி கடிகாரத்தை பார்த்தபோது கடிகாரம் காட்டிய நேரம் மு.ப. 8.55 எனின் சரியான நேரம் யாது?

1. 8.30 2. 9.20 3. 9.55

39. சரீன் 48 உடன் 23 ஐக் கூட்டுவதற்குப் பதிலாக 32 ஐக் கூட்டினான் எனின் அவன் பெறவேண்டிய விடை பெற்றுக் கொண்ட விடை என்பவற்றுக்கிடையிலான வித்தியாசம் எத்தனை?

1. 71 2. 80 3.09

40. இலங்கை 1972ஆம் ஆண்டு குடியரசாகியது. இவ் ஆண்டானது எத்தனையாம் நூற்றாண்டு , எத்தனையாவது தசாப்தம்?

1. 19,7 2. 20, 7 3. 20,8

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அமேசனின் அழிவுக்கு காரணமான மாட்டிறைச்சி

பிரேசிலின் சோயா மற்றும் மாட்டிறைச்சி ஏற்றுமதிச் செயற்பாடுகள் சட்டவிரோத அமேசன் காடழிப்புக்குக் காரணமாகின்றன என்று ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பிரேசிலின் சோயா ஏற்றுமதியில் ஐந்தில் ஒரு பகுதி சட்டவிரோத காடழிப்பிற்கு வழிவகுக்கின்றது என்று குறித்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காடுகளை அழித்து மேற்கொள்ளப்படும் சோயா செய்கை மற்றும் கால்நடைப் பண்ணைகளை அடையாளம் காண்பதற்காக, உலக வரைபடங்களையும் தரவுகளையும் ஆய்வாளர்கள் பயன்படுத்தியுள்ளனர். பண்ணைகள் மற்றும் செய்கை நிலங்களில் 2 வீதமானமை 62 வீதமான காடழிப்புக்குக் காரணமாகியுள்ளது என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். (ரி1)



# பங்களாதேஷில் பருவ மழையால் உயிரிழந்தோர் தொகை 62ஆக உயர்வு

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்வடைந்துள்ளதாக அந் நாட்டு அரசாங்கம் கடந்த சனிக்கிழமை மாலை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் 51பேர் வெள்ளத்தில் மூழ்கியும், ஏழு பேர் மின்னல் தாக்கியும், மூன்று பேர் பாம்புக் கடியினாலும், ஒருவர் சுத்தமான குடிநீர் இல்லாமையினால் உண்டான வயிற்றுப் போக்குக் காரணமாகவும் உயிரிழந்துள்ளனர் என்று அரசாங்க அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி1)

**பெண்கள் வேலைக்குத் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு வேலைக்குப் பெண்கள் தேவை.யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
**தொடர்பு:- 077 755 0008**

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரி (Town) இல் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.
**077 651 9028, 077 639 1343**

# மாலியில் தொடரும் ஆர்ப்பாட்டங்கள்

மாலி இராச்சியத்தில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. பயங்கரவாதிகளை ஒடுக்கத் தவறியமை மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தார் என்று அந்நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் பவுபக்கரைப் பதவி விலகுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர். கடந்த சில வாரங்களாக நீடிக்கும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக மாலி இராச்சியத்தில் அமைதியின்மை நிலவுகின்றது. தலைநகர் பமாக்கோ உட்பட பல இடங்களில் எதிர்ப்பு பேரணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆட்சியிலுள்ள அரசாங்கம் ஜனநாயக ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்துள்ளனர். (ரி1)

**முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளில் தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக இரண்டு தரவு நிரற்படுத்துநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2020**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் திட்டத்தினூடாக தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைக்கான தரவுகளை கணினிகளில் இணைய வழிகளில் பதிவேற்றம் செய்வதற்காக இரண்டு தரவு நிரற்படுத்துநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- இந்தப் பதவி நிரந்தரமற்றது.
- இந்தப் பதவிக்குரிய பதவிக்காலம் ஆகக்கூடியது 6 மாதங்கள்
- தெரிவுசெய்யப்படுபவர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பொறுப்புக் கூறுபவராக இருப்பார்
- ஒரு நாளுக்கு 500 ரூபா மட்டும் சம்பளமாக வழங்கப்படும்.
- ஒரு மாதத்தில் ஆகக் கூடுதலாக 20 நாட்கள் வேலைசெய்ய முடியும்.

**இந்தப் பதவிக்குரிய தகைமைகளும், அனுபவமும்**

01. NVQ நிலை 3/4/5 பாடநெறியில் தகுதி பெற்றிருக்க வேண்டும். அல்லது பயிற்சியாளராக இருக்க வேண்டும். அல்லது அதற்கு சமனான தகுதி ICT இல் பெற்றிருக்கவேண்டும்.
02. சாதாரண தரத்தில் கணித பாடத்திலும் ஆங்கிலத்திலும் சாதாரண சித்தி பெற்றிருக்கவேண்டும்.
03. பதவிக்காக தெரிவு செய்யப்படும் வைத்தியசாலைக்கு பொருந்தக் கூடிய வகையில் சிங்களத்தில் அல்லது தமிழில் சரளமாக பேசக்கூடியவராக இருக்க வேண்டும்.
04. ஒரு அரச நிறுவனத்தில் தரவு நிரற்படுத்துநர் ஆக வேலை செய்திருத்தல் மேலதிகமான தகைமையாக கொள்ளப்படும்.

இதற்கான நேர்முகத் தேர்வு 30.07.2020 அன்று காலை 10.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**பணிமனை, முல்லைத்தீவு**

(in.13237) (13.17)

# 3 மாதப் பயிற்சி போதும் என்னால் ஓட்டங்கள் குவிக்க!

## கங்குலி தெரிவிப்பு

புதுடெல்லி, ஜூலை 20



இந்திய அணிக்காக டெஸ்ட் போட்டிகள் ஓட்டங்கள் குவிக்க எனக்கு 3 மாதப் பயிற்சி, 3 ரஞ்சி ஆட்டங்களில் விளையாடினாலே போதுமானது என்று இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.


113 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கங்குலி 7 ஆயிரத்து 212 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதில் 16 சதங்கள் அடங்கும். 311 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய கங்குலி 11 ஆயிரத்து 363 ஓட்டங்கள் குவித்தார். அதில் 22 சதங்கள் அடங்கும்.

தன்னுடைய கடந்த கால நினைவுகள் குறித்தும், தன்னால் இன்னும் கிரிக்கெட்டில் சாதிக்க முடியும் என்பது குறித்தும் "சங்பாத் பிரதிதின்" வங்காள நாளேட்டுக்கு அவர் பேட்டி அளித்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

2007ஆம் ஆண்டு என்னை ஆஸ்திரேலியத் தொடரிலிருந்து நீக்காமல் கூடுதலாக இரு ஒருநாள் தொடர்களில் வாய்ப்பு அளித்திருந்தால் நான் இன்னும் அதிகமான ஓட்டங்கள் குவித்திருப்பேன். நான் நாக்பூர் டெஸ்ட் போட்டியோடு ஓய்வு பெறாமல் இருந்திருந்தால், அடுத்து நடந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் அதிகமான ஓட்டங்களைக் சேர்த்திருக்க முடியும்.

இப்போதும்கூட நீங்கள் எனக்கு 6 மாதம் பயிற்சி அளித்து 3 ரஞ்சிப் போட்டிகளில் விளையாட வாய்ப்புக் கொடுத்தால் போதும் என்னால் இந்திய அணிக்காக டெஸ்ட் போட்டியில் ஓட்டங்களைக் குவிக்க முடியும். இல்லை, இல்லை, எனக்கு 3 மாத பயிற்சியே போதும், என்னால் ஓட்டங்களைக் குவிக்க முடியும். எனக்கு நீங்கள் விளையாட வாய்ப்பைக் கொடுக்காமல் இருந்துவிட்டு, என் ஆழ்மனதுக்குள் இருக்கும் நம்பிக்கையை எவ்வாறு உடைக்க முடியும். உங்களிடம் இருந்து உங்களுக்கான மேடை பறிக்கப்படும்போது, என்ன தான் சிறப்பாக விளையாடி இருந்தாலும், திறமையோடு இருந்தாலும். உங்களை எவ்வாறு நிரூபிக்க முடியும், யாரிடம் சென்று உங்களை நிரூபிக்க முடியும். அதேபோன்ற நிலைமைதான் எனக்கும் அப்போது நேர்ந்தது - என்றார். (ரி2)



## பழமை வாய்ந்த பேராலயத்தில் தீ

பாரிஸ், ஜூலை 20
பிரான்ஸின் மேற்கு பிராந்தியத்தி லுள்ள 15 ஆம் நூற்றாண்டு பழமைவாய்ந்த புனிதர்களான இராயப்பர், சின்னப்பர் பேராலயத்தில் தீ பரவியுள்ளது. இந்தப் பேராலயத்தின் மூன்று வெவ்வேறு இடங்களில் தீ பரவியுள்ளது.
தீ தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக உள்ளூர் தீயணைப்பு சேவை தெரிவித்துள்ளது. தீப்பிழம்புகளால் பேராலயத்தின் அலங்கார வேலைப்பாடுகள், வண்ணமயமான கண்ணாடி ஜன்னல்கள் என்பவை சேதமாகியுள்ளன. (ரி1)

# 6 லட்சத்தை கடந்தது கொரோனா

**வொஷிங்டன், ஜூலை 20**
**உலகம் முழுதும் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை நேற்றைய நிலவரப்படி, 6 லட்சத்து 4 ஆயிரத்து 917 ஆக உள்ளது.**

அமெரிக்காவில் மட்டும் 140, 103 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இதே வேளை பிரேசிலில் 78, 772 பேரும், பிரிட்டனில் 45,358 பேரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். அத்துடன் இந்தியாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 26,828 ஆக உயர்வடைந் துள்ளது. உலக அளவில் பாதிப்பு எண்ணிக்கை 1 கோடியே 44 லட்சத்து 25 ஆயிரத்து 865 ஆக அதிகரித்துள்ளது. இதில் 3 கோடியே 8 லட்சத்து 33 ஆயிரத்து 271 பேர் அமெ ரிக்காவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாத் தொற்றால் மேலும் 2லட்சத்து 59 ஆயிரத்து 848 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உலகச் சுகாதார அமைப்புத் தெரிவித்துள்ளது.



## பிரிட்டனின் குற்றச்சாட்டை ரஷ்யா நிராகரிப்பு

லண்டன், ஜூலை 20
கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து உருவாக்கல் முறையைக் கையாட முனைந்ததாகத் ரஷ்ய புலனாய்வு சேவைகள் நிறுவனத்தின் மீது முன்வைக் கப்பட்டக் குற்றச்சாட்டை ரஷ்யா நிராகரித்துள்ளது.
குறித்த குற்றச்சாட்டை நிராகரிப்பதாக பிரித்தானியாவுக்கான ரஷ்ய தூதுவர் அன்ட்ரி கெலின் தெரிவித்துள்ளார்.
இந்தக் குற்றச்சாட்டுகளை நம்பமுடியாதிருப்பதாகவும் அவை முட்டாள்தனமானவை எனவும் பி.பி.சி செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியில்அவர் தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து உருவாக்கும் நிறுவனங்களை, ஊடுருவலாளர்கள் இலக்கு வைத்துள்ளதாக, பிரித்தானிய பாதுகாப்பு சேவைகள் நிறுவனம் கடந்த வியாழக்கிழமை எச்சரித்திருந்தது.
இந்த ஊடுருவலாளர்கள் ரஷ்ய புலனாய்வுசேவைகள் நிறுவனத்தின், ஒரு பகுதியாக இயங்குவதாகவும் அது தெரிவித்திருந்தது. (ரி1)

மரண அறிவித்தல்

**குட்டியர் சபாரத்தினம்**




தோற்றம் 1944.02.03 மறைவு 2020.07.19

கல்லுவம் கரணவாய் மேற்கை பிறப்பிடமாகவும், செல்லம் மில் வீதி, இமையாணன் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியர் சபாரத்தினம் நேற்று (19.07.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னார் யோகரத்தினத்தின் அன்புக் கணவரும், யோகேந்திரன், குலேந்திரன், மஞ்சுளா, ரவிக்குமார், பாலகுமார் காலஞ்சென்றவர்களான ரவீந்திரன் , ரவிகிஸ்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2020) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0771980978 தகவல் : குடும்பத்தினர்

# இந்தியாவில் ஒரே நாளில் 38,902 பேருக்குத் தொற்று!

புதுடில்லி, ஜூலை 20
இந்தியாவில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் 38,902 புதிய கொரோ னாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 543 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளதாக அந் நாட்டு சுகாதார அமைச்சு நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.
கொரோனா பரவல் ஆரம்பித்ததிலிருந்து இந்தியாவில் ஒரே நாளில் பதிவான அதிக படியான கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவாகும்.
இந்தியாவில் மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது 1,077,781 ஆகவும், உயிரிழப்புகளின் எண்ணிக்கையானது 26,828 ஆகவும் காணப்படுகிறது. இதேநேரம் கொரோனாத் தொற்றுக்குள்ளான 677,423 பேர் பூரண குணமடைந்தும் உள்ளனர். (ரி1)



மரண அறிவித்தல்

**திருமதி உமையம்மா கணபதிப்பிள்ளை (நவமணி)**



தோற்றம் 20.06.1936 மறைவு 25.06.2020

சாவகச்சேரி மட்டுவிலைச்சேர்ந்த வட்டக்கச்சி பின்னர் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நவமணி என்று அழைக்கப்படும் திருமதி உமையம்மா கணபதிப்பிள்ளை கடந்த (25.06.2020) வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.
அன்னார் காலம்சென்ற சித்த ஆயுர்வேத வைத்தியர் திரு கந்தையா கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், விஜய லக்ஷ்மி குகதாஷ் (தேவி - வட்டக்கச்சி லண்டன்) . திரு கணேஷமூர்த்தி (கணேஷ் மாஸ்ரர் - வட்டக்கச்சி, லண்டன்.) காலம் சென்றவர்களான திரு விநாயகமூர்த்தி (கருணா - வட்டக்கச்சி, லண்டன்), திரு பிரகாஸமூர்த்தி ( வட்டக்கச்சி, லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், குகதாஸ் (கிளிநொச்சி, லண்டன்), சந்திரிகா (கிளிநொச்சி , லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுசன் (லண்டன்) இன் அன்பு அம்மம்மாவும், அஸ்விகா (லண்டன்) ஆதர்ஸ் (லண்டன்) இன் அப்பம்மாவும், திரு கிருஷ்ணபிள்ளை , திரு இராமலிங்கம், திருமதி துரைமணி, திரு நடராஜா அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி காங்கேசு, திருமதி கிருஷ்ண பிள்ளை, திருமதி இராமலிங்கம், திரு கந்தசாமி, திரு சபாரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2020) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.
தொடர்புகட்கு:- கணேஷ் :- +447897764340 (லண்டன்)
குகதாஸ்:-+447877356512 (லண்டன்)

## பிரபாகரன்....

கருத்து வெளியிடும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்குமாறு எனக்கு அழைப்பு விடுகின்றார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன். நாங்கள் சிறிலங்கா சுதந்திர கட்சியை அமைத்தவர்கள். பண்டாரநாயக்க, டி.ஏ.ராஜபக்ச போன்றவர்கள் தான் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியே வந்து கட்சியை அமைத்தார்கள்.
2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் சுதந்திர கட்சி எங்கள் முதுகில் குத்தியது. அதன் பின்னர் தான் நாங்கள் தாமரை மொட்டின்கீழ் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியை உருவாக்கி, பிரதேசசபை தேர்தலில் வெற்றி பெற்றோம்.
மைத்திரிபால சிறிசேன என்னை அழைத்து பிரதமர் பதவியை வழங்கினார். அதற்கு முன்னர் 54 ஆசனங்கள் எங்களுக்கு இருந்த போதிலும் எங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கவில்லை. 16 ஆசனங்கள் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட்டு 6 ஆசனங்கள் கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிர்க்கட்சி பிரதான ஏற்பாட்டாளர் பதவி வழங்கப் பட்டது.
நாங்களும் தந்திரங்களை பயன்படுத்தி பிரதமர் பதவியை ஏற்று 51 நாள்களின் பின்னர் பிரதமர் பதவியில் இருந்து விலகி எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்றோம்.
நாங்கள் மீண்டும் ஒன்றிணைந்து முன்னணிக்கு வந்துள்ளோம். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு இடையில் மோதல் ஏற்படும் வகையில் செயற்பட வேண்டாம். வாக்கு சண்டைகளுக்கு செல்ல வேண்டாம். 50 வருட அரசியல் அனுபவம் கொண்டவனாக இதனை ஆலோசனையாக கூறுகிறேன்.
அரசமைப்பை மாற்ற, நாட்டிற்கு பொருத்தமான, ஒற்றுமையை பாதுகாப்பதற்காக புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு நாங்கள் தயார். பிரபாகரன் துப்பாக்கியில் பெற முயற்சித்த நாட்டை பேனையில் வழங்க நாங்கள் தயாரில்லை, என்றார். (ஒ.5)

## வடக்கு, கிழக்கில்...

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞான சார தேரர், ராவண பலய அமைப்பின் பொதுச்செயலர் இத்தானந்தே சுகத தேரர், தேசிய பௌத்த புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. சமஷ்டி அடிப்படையில் தன்னாட்சியே தீர்வு என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சமஷ்டி என்றால் பிரிவினை. அது தனி நாடு என்றுதான் அர்த்தம். அதாவது இந்தச் சமஷ்டித் தீர்வு இலங்கையைப் பிளவுபடுத்தும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நீதிமன்றத்தின் வியாக்கியானத்தையும் தீர்ப்பையும் தூக்கி குப்பையில் வீசுங்கள்.

தமிழர்களுக்கு சமஷ்டி வழியில் தீர்வு வழங்க நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். தனிநாடு கோரி மீண்டும் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் வடக்கு, கிழக்கில் இரத்த ஆறுதான் ஓடும். மீண்டும் அப்படியான ஒரு நிலைமை ஏற்பட நாம் விரும்பவில்லை. அரசு வழங்கும் தீர்வைத்தான் தமிழர்கள் ஏற்கவேண்டும். அதைவிடுத்து மீண்டும் ஓர் இருண்ட யுகத்துக்குள் செல்ல வேண்டாம் என்று தமிழர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ராஜபக்சக்களின் இந்த ஆட்சிக்காலத்தில் அரசுடனும் சிங்கள மக்களுடனும் ஒன்றிணைந்து பயணிக்க தமிழ் மக்கள் முன்வர வேண்டும். இது சிங்கள பௌத்த நாடு. எனவே, தமிழர்கள் தனி வழியில் நிற்காமல் சிங்கள மக்களுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். அப்போது தான் சிங்கள மக்கள் விரும்பும் தீர்வைத் தமிழர்கள் பெற்றுக்கொள்ளலாம். இல்லையேல் தீர்வு என்பது தமிழர்களுக்கு எட்டக்கனியாகவே இருக்கும். பிரபாகரனின் சிந்தனையில் செயற்படுவதை தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் நிறுத்த வேண்டும், என்றனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தேவையென்று குறிப்பிடப்பட்டுள்ளமையை சவாலுக்கு உட்படுத்தி சிங்கள அமைப்புக்களால் கடந்த காலங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சமஷ்டி பிரிவினை அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5,22)

## சலுகைகளை....

ளுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளை வழங்க வேண்டும். அவற்றைக் கொடுத்தால்தான் சம்பந்தனை அவர்களால் சமாதானப்படுத்த முடியும். இது தான் உண்மையான நிலைமை. இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசிடமிருந்து சலுகைகளைப் பெறுவதற்காக எமது கொள்கைகளை விட்டுக்கொடுக்கமாட்டோம்; உரிமைகளை விட்டுக்கொடுக்கமாட்டோம். இதை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது எமது கடமை. நாங்கள் இதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

**கூட்டமைப்பை ஆதரியுங்கள்**

நான் தமிழ் மக்களிடம் மிகவும் தாழ்மையாகவும் அன்பாகவும் கேட்டுக்கொள்வது என்னவெனில் மாற்றுக் கட்சிகளை உதாசீனம் செய்யுங்கள்;, நிராகரியுங்கள். அந்தக் கட்சிகளால் உங்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. மாற்றுக் கட்சியைச் சேர்ந்த தனிப்பட்ட நபர் ஒருவர் நாடாளுமன்றத்துக்கு வந்து எதையும் செய்ய முடியாது. தனிப்பட்ட நபர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரியுங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலமான ஓர் அணியாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவையுங்கள். தனிப்பட்ட நபர்களை முற்றாக நிராகரியுங்கள். எமக்கு ஆணையைத் தாருங்கள்.

மாற்றுக் கட்சி என்ற பெயரில் போட்டியிடும் தனிப்பட்ட நபர்கள் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஓர் ஆசனத்தை வென்று தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அவர்களுக்கு கிழக்கு மாகாணத்தில் ஆதரவு இல்லை. வன்னியிலும் ஆதரவு இல்லை. யாழ்ப்பாணத்தில் மட்டும் ஓர் ஆசனத்தை வென்று எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. ஆனபடியால் தமிழ் மக்கள் தங்கள் முழுமையான ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எங்களுக்குத் தாருங்கள் என்று மிகவும் தாழ்மையாகவும் அன்பாகவும் கேட்டுக்கொள்கின்றேன், என்றார். (ஓ,5,22)

## மஹிந்தவின்...

தில் கடும் அமளி துமளி ஏற்பட்டது.

ஒரே கட்சியில் போட்டியிடும் அரசியல்வாதிகளுக்கிடையிலான விருப்பு வாக்கு போட்டிகாரணமாக கூட்டத்தில் பங்கேற்றிருந்த ஆதரவாளர்கள் சிலர் நரிகள் போல ஊளையிட்டு, கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

மொனராகலை மாவட்டத்தில் செவனகல பகுதியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தை மாவட்ட முதன்மை வேட்பாளரான சசீந்திர ராஜபக்சவும், மொட்டு கட்சியின் வெல்லவாய தொகுதி அமைப்பாளரான விமல் கலகம ஆராய்ச்சியும் ஏற்பாடு செய்திருந்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூட்டத்தில் பங்கேற்பதற்கு முன்னர், வேட்பாளர்கள் வருகை தந்திருந்தனர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவாக செயற்பட்டு இம்முறை மொட்டு கட்சியில் போட்டியிடும் ஜகத் புஷ்பகுமார உரையாற்றும்போது தேரர் ஒருவர் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டார். ஜகத் புஷ்பகுமார உட்பட மைத்திரி பக்கம் சென்ற உறுப்பினர்களை தேரர் கடுமையாக விமர்சித்து உரையாற்றினார். அவ்வாறு அவர் உரையாற்றும்போது கூட்டத்தில் பங்கேற்றிருந்த பலர், அதனை ஆமோதிக்கும் வகையில் கோசம் எழுப்பினர்.

இதனையடுத்து தேரரை மேடையில் இருந்து வெளியேறுமாறு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர். அவரின் ஒலிவாங்கியும் செயலிழக்கவைக்கப்பட்டது. அதன்பின்னர் ஜகத் புஷ்பகுமார உரையாற்ற வந்தார். அவ்விடத்துக்கு வந்த தேரர் மீண்டும், குழப்பம் விளைவித்தார். தேரரை வேட்பாளர்கள், சிலர் சமாதானப்படுத்தி அழைத்துச்செல்ல முற்பட்டனர். ஆனால், புஷ்பகுமார உரையாற்ற முயற்சித்தபோது மக்கள் கூச்சலிட்டனர். இந்நிலையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வருகைதந்தார்.

அதன்போது விமல் கலகம ஆராய்ச்சி உரையாற்றிக்கொண்டிருந்தார். அவ்வேளையில் அவரின் மகன்மீது, மொட்டு கட்சி ஆதரவாளர்கள் சிலர் தாக்குதல் நடத்தியதால் பதற்றநிலைமை உருவானது. ஒருவாறு பதற்றநிலைமை கட்டுப்படுத்தப்பட்டது. (ஓ,5,44)

## தேர்தல் ஆணைக்குழுவின்...

புலனாய்வுத் திணைக்களம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு விசாரணைக்கு அழைப்பதை, தேர்தல் முடியும் வரை இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பொலிஸ்மா அதிபருக்கு எழுத்துமூல கடிதம் ஒன்றின் ஊடாக அறிவித்திருந்த நிலையிலும், இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குண்டுதாரி இன்சாப் அஹமட் தொடர்பிலான விவகாரம் குறித்தே, வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் ரிசாட் முன்னிலையாகவேண்டும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பொறுப்பதிகாரிஅழைப்பாணையை விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு தவிசாளர், பொலிஸ்மா அதிபருக்கு விடுத்த அறிவுறுத்தலின் பின்னர், முன்னாள் அமைச்சர் ரிசாh்ட் பதியுதீன், தமது தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஈடுபடுவதற்காக, அம்பாறைக்கு பயணம் மேற்கொண்டிருந்த போதே, இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

## மாணவி...

என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஒரு வருடத்திற்கு முன்னர் இவர் திருமணம் செய்துள்ளார். தற்போது உயர்தரப்பரீட்சை எழுதுவதற்கு படித்துவந்துள்ளார்.

இந்த நிலையில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ,5,25,26)

## மின்சாரம் தாக்கி...

விதுசா என்ற 11 மாத குழந்தையே உயிரிழந்துள்ளது. நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு மின்சார வயர் வீட்டினுள் இருந்து இணைக்கப்பட்டிருந்தது. தவழ்ந்து சென்ற குழந்தை வயரை இழுத்துள்ளது. வயர் ஊடாக பாய்ந்த மின்சாரம் குழந்தையை தாக்கியுள்ளது.

குழந்தையை உடனடியாக அனலைதீவு பிரதேச மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளர். மேலதிக விசாரணையை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ,5,25)

## யானை தாக்கி...

விப்பாளரான பெண் ஒருவர், யானை தாக்கியதில் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8.15 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் டில்றுக்சி (வயது35) என்பவரே காயமடைந்துள்ளார். சுயநினைவிழந்த நிலையில் அவர் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குமாற்றப்பட்டுள்ளார். அவரது தலைப்பகுதியிலேயே கடுமையான காயங்கள் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ,5,6)

## துப்பாக்கிச்....

காலை 3.15 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேயிடத்தைச் சேர்ந்த கனக விநாயகமூர்த்தி (வயது54) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

அவரது வீட்டுக்கு நேற்று அதிகாலை சென்றநபர் ஒருவர், விநாயகமூர்த்தியை வெளியில் வருமாறு அழைத்துள்ளார். அவர் வெளியில் வந்தபோது, இடியன் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஓ,5,6)

## ரயில் மோதி...

சரத்தினம் (வயது64) என்பவர் காயமடைந்த நிலையில், கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஓ,5,6)

## தீர்வை வழங்காத....

டத்தை நடத்தவுள்ளனர். போராட்டத்துக்கான அறிவிப்பை பருத்தித்துறை முனைப்பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மீனவர்கள் அறிவித்தனர். வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வர்ணகுலசிங்கம் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களமும், சம்பந்தப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுமே சட்டவிரோத தொழிலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமையாலேயே அவை தொடர்ந்து நடைபெறுகின்றன. 1996ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கடல் வள சட்டம் எமக்குப் பொருந்தாது. இந்தச் சட்டம் தென்னிலங்கைக்கே பொருத்தமானது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை வரையில் நாம் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளோம். எமக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ந்து போராடுவோம். ஏனைய மீனவ சங்கங்களும் எமக்கு ஆதரவு தர வேண்டும், என்றார். (ஓ,எ,26)

## சங்கிலியைத்....

திருகோணமலையைச் சேர்ந்த 23 வயது பெண் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து சங்கிலி மீட்கப்பட்டுள்ளது. கைதான பெண் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஓ,5,26)



பழைமை மிகுந்த லா லிகா கால்பந்துத் தொடர்

# மகுடம் சூடியது மட்ரிட்!



மட்ரிட், ஜூலை 20

**ஸ்பெய்ன் கால்பந்துக் கழகங்களுக்குஇடையில்நடைபெறும் பழைமை மிகுந்த லா லிகா கால்பந்துத் தொடரில் ரியல் மட்ரிட் அணி கிண்ணம் வென்றது.**

ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில் கடந்த வியாழக்கிழமைநள்ளிரவு இந்த ஆட்டம் இடம்பெற்றது. ரியல் மட்ரிட் மற்றும் வில்லாரியல் அணிகள் மோதின. ஆட்டத்தின் முதல் 25 நிமிடங்கள் வரையில் ரியல் மட்ரிட்டுக்கு ஈடுகொடுத்து விளையாடியது வில்லாரியல். மட்ரிட்டின் வசம் பந்து அதிகநேரம் இருந்தபோதிலும் வில்லாரியலின் பின்வரிசையை தகர்த்து கோலைப் பதிவு செய்ய மட்ரிட்டால் முடியவில்லை. ஆட்டத்தின் 29 ஆவதுநிமிடத்தில்அணித்தலைவர்ராமோஸ்கொடுத்த பரிமாற்றத்தைப்பெற்றபென்சிமா அற்புதமாக ஊடுருவிச் சென்று முதலாவது கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து 1:0 என்று முன்னிலை பெற்றது மட்ரிட்.

பந்துடன் இணைந்து நிமிடங்களும் உருண்டோட1:0என்றகோல்கணக்கில்முதல்பாதியில் முன்னிலைபெற்றது மட்ரிட்.

இரண்டாவது பாதியும் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன்நகர்ந்துசென்றுகொண்டிருந்தது. ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் மின்ன ல்வேக பெனால்டி மூலம் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார் பென்சிமா. 83 ஆவது நிமிடத்தில் வில்லாரியலின் சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார் லிபோரா. முடிவில் 2:1என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி கிண்ணம் வென்றது.

ரியல் மட்ரிட் அணிக்குக் கிடைத்த 34ஆவது லா லிகா கிண்ணம் இதுவாகும்.

(ம)

# ஷாகித்துக்கு கொரோனா!

புதுடெல்லி, ஜூலை 20

இந்தியக் கால்பந்து அணியின் முன்னாள் வீரர் ஒருவருக்கு கொரோனாப் பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

1960 ஆம் ஆண்டு ரோமில் நடந்த ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய கால்பந்து அணியில் அங்கம் வகித்தவரும், 'தயான் சந்த்' விருது பெற்றவருமான 81வயது சையத் ஷாகித் ஹாகிம் கொரோனாத்தொற்றால்பாதிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் ஐதராபாத்தில் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் மையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பாக சையத் ஷாகித் ஹாகிம் தெரிவித்ததாவது:

கர்நாடகமாநிலத்தில்உள்ளகுல்பர்காவுக்குசென்றுவிட்டுதிரும்பியதும் எனக்கு காய்ச்சல் ஏற்பட்டது. மருத்துவரின் அறிவுறுத்தலின்பேரில்6நாள்களுக்குமுன்னதாகபரிசோதனைசெய்து பார்த்ததில்கொரோனா இருப்பது உறுதியானது. கடந்த 2 நாள்களாக எனது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது - என்றார். (ரி2)

Jaffna Nallur
Video Editing
திருமணம், பூப்புனிதநீராட்டு விழா, பிறந்தநாள்
பயிற்சி முடிவில் 100% வேலைத்திறனுக்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்
Adobe Premiere CC,EDIUS 8,After Effect CC, Photo Shop CC
10 Days 20 Hours Video Plugin
Colorcorrection,Adorage Filter,Mask,New blue,Blu ray writing
Skin smooth,Color Upgrading Wedding song Editing Technic,
விபரங்களுக்கு - 0773903123

MATHS GROUP CLASSES
தரம் 6 மற்றும் 9 வகுப்புகளுக்கான கணித குழு வகுப்புக்கள் (English & Tamil Medium) வீடு வந்து கற்பிக்கப்படும்.
077 4540 529
(இரண்டு குழு வகுப்புகளுக்கான நேர அனுமதி மாத்திரமே உண்டு)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கான துரித தபால்கள். பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

ஆலயக் கட்டட நிர்மாண கட்டடக் கலைஞர்கள் தேவை
மேற்படி நாவற்குழி இறை கோவிலாக்கண்டி தெவிண்ட கம்பிட்டி பூரணா புட்கலா சமேத அரிகர புத்திர ஐயனார் ஆலயம் புதிதாகக் கட்டுவதற்கு தகுதியான ஆலயக் கட்டடக் கலைஞர்கள் தேவை. தகுதியும், திறமையும் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
செயலாளர்: 077 907 2467
மேலதிக தொடர்புக்கு:- 077 3628 758

CHEMISTRY
KaSubeesan
A/L மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு
வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.
ஜீலை 26 (ஞாயிறு) 27 (திங்கள்)
▶ 800 நாட்களுக்கு மேற்பட்ட பாட அலகுகளை வெறும் 8 நாட்களில் கற்கும் வாய்ப்பு
▶ அலகு ரீதியான துரித மீட்டல்
▶ அனைத்து மாணவர்களும் 80 புள்ளிகளுக்கு மேற்பட்ட பாடப்பரப்பினை 8 நாட்களில் கற்றுக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பு
○ Inorganic - 2 Days
○ Organic - 2 Days
○ Physical - 2 Days
○ General - 2 Days
அனுமதிக்கட்டணம் 1000/=
ஒவ்வொரு அலகிலும் 250MCQ, இறுதி 3 வருட Part ii வினாக்கள் கற்றுத் தரப்படும்
▶ ஆர்வம் உடைய மாணவர்கள் 'A' சித்தி பெற்றுக் கொள்ள உறுதுணையாக இருக்கும்
அனுமதிகள் ஜீலை 18 லிருந்து 23 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
077 430 7829 / 075 566 3375

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 28 . 02 . 1935

விண்ணில் 31 . 07 . 2019

அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்,
அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## செல்லத்துரை கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

அப்பா...... எம் கனவில் கலந்து உங்கள்
எல்லையற்ற நினைவுகள் நிற்கின்றன நிழலாக...
உங்களை இழந்து ஆண்டு ஒன்று சென்றாலும்...
உங்கள் அன்பு முகமும், நேசப்புன்னகையும் மறையவில்லை எம்மைவிட்டு...
வருடங்கள் நீண்டாலும் உங்கள் நினைவுகள் நீங்காது
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் இதயத்தோட்டத்தில்
பூத்துக்கொண்டிருக்கும் உங்கள் நினைவுகள்.......

"செந்தில்"
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி

உங்கள் நினைவில் வாடும்
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(J.12487) (13.17)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.